பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்



0776906182


# தினப்புயல்

THINAPPUYAL

තිනප්පුයල්

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06


கலையரசி நகைமாடம்



புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.


T.P- 0770457661

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -330

## கௌதம புத்தரும் நாட்டின் ஜனாதிபதியும்







## ஜனாசா எரிப்பு விவகாரமும் இலங்கை மீது அரபு நாடுகளின் சிவப்பு எச்சரிக்கையும்




## சிங்கள பேரினவாத பெரும்பான்மை அரசியல் மீண்டும் ஜூலை கலவரத்தை நோக்கி...

# கௌதம புத்தரும், நாட்டின் ஜனாதிபதியும்



இன்று நாடளாவிய ரீதியில் தொல்பொருள் ஆராய்ச்சிகள் என்கிற நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டிருக்கிறது. இதனது பிரதான நோக்கம் தமிழர் வாழ் பிரதேசங்களை அபகரித்து அங்கெல்லாம் பௌத்த விகாரைகளை அமைப்பதாகும். தற்போது யாழில் நிலாவறைக் கிணற்றுக்குள் கட்டடம் இருப்பதாகக் கூறுகிறார்கள். அதேபோல் குமுழமுனையில் அமைந்துள்ள குருந்தூர் மலையில் சந்திரவட்டக்கல் இருக்கிறது என்றெல்லாம் கூறுவதுடன் அங்கும் புத்தரின் சிலையினை வைத்துள்ளார்கள். இப்போது எங்கெங்கெல்லாம் மலைகள் இருக்கிறதோ அரச மரங்கள் இருக்கிறதோ அங்கெல்லாம் சிங்களவர்கள் வாழ்ந்தார்கள் இது எமது பிரதேசம் என அடையாளப்படுத்தி அதனை சிங்களவர்களிடம் ஒப்படைக்கின்ற வேலையை இத் தொல்லியல் திணைக்களங்கள் செய்கின்றன. இதனை தமிழ் அரசியல் தலைமைகள் நன்கு புரிந்துகொள்ளவேண்டும். சர்வதேச குற்றவியல் நீதிமன்றங்களுக்கு தமிழ்த் தலைமைகள் சென்று சாட்சிகள் வழங்குவதற்றும், அங்கு சென்று நீதியைக் கேட்பதற்கும் அதனைத் திசைதிருப்புவதற்காகவே அரசால் இவ்வாறான குழப்பகரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்விடயம் சாதகமாக வந்தாலும் சரி பாதகமாக அமைந்தாலும் சரி அவர்களால் அடையாளப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் பௌத்தவிகாரைகளை அமைத்து, இடங்களை மாற்றியமைத்து, தொல்பொருள் ஆராய்ச்சிகள் என்கிற போர்வையில் வரலாறுகளை திருத்தி எழுதக்கூடிய வாய்ப்புக்களும் இருக்கின்றன. பல்கலைக்கழக மாணவர்களையும் இணைத்துக்கொண்டு, வரலாறுகள் கட்டுரைகளாக எழுதப் பட்டு பின்னர் அதனைப் பாடப்புத்தகத்தில்திணிப்பதற்கான நடவடிக்கைகளையும் இவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

உண்மையில் ஆயுதப்போராட்டம் இருந்த காலகட்டத்தில் வட கிழக்கில் தமிழர் பிரதேசங்கள் சிங்களப் பேரினவாதிகளால் ஆக்கிரமிக்கப்படவில்லை. தற்போது ஆயுதப் போராட்டம் மௌனிக்கப் பட்டதன் பின்னர் மறைமுகமான இனவழிப்பு இடம் பெறுகிறது. வெளிப்படையாக தமிழ் மக்களை அடக்கி ஒடுக்குகின்ற நடவடிக்கைகளில் அரச தரப்பினர் ஈடுபடுகின்றனர். ஆரம்பத்தில் இந்த நடவடிக்கைகளில் அரசு முஸ்லீம் இளைஞர்களையும் இணைத்துக்கொண்டது. ஊர் காவற்படையினர் என்கிற பெயரில் தமிழ் மக்களுக்கு எதிராக அநீதிகள் இழைக்கப்பட்டதை யாரும் மறக்கமாட்டார்கள். தற்போது அரச தரப்பினரால் முஸ்லீம் தரப்பினரின் ஜனாசா எரிப்பு விவகாரம் பேசு பொருளாக எடுக்கப்பட்டுள்ளது. இன்று அரசு அவர்களுக்கு எதிராக செயற்படுகின்ற விதத்தினை அவதானிக்க முடிகின்றது.

தாங்கள்பெரும்பான்மையினரால் வெற்றி பெற்றுவிட்டோம். நாம் இனி அரசியலில் பெரும்பான்மையினரை வைத்து தமது இருப்பினைத் தக்க வைத்துக் கொள்வோம். தாம் எண்ணியதை எல்லாம் செய்து முடிப்போம் என கங்கணம் கட்டிச் செயற்படுகிறார்கள். சிங்களத் தலைமைகள் இனி ஒற்றுமையாக வாழ்வதற்கு வடகிழக்கில் இருக்கக்கூடிய தமிழ் பேசும் மக்கள் வழிவகைகளை ஏற்படுத்துவார்களாகவிருந்தால், அவர்கள் நிச்சயம் எம்மை நிம்மதியாக வாழ விடமாட்டார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினைப் பொறுத்தவரையில் அவர்களுடைய கட்சிகளில் ஒரு இரகசியமான குழுவினை வைத்துக்கொள்ள வேண்டும். அவர்களை வைத்துத்தான் இனி ஒவ்வொரு நடவடிக்கைகளையும் செயற்படுத்தவேண்டிய தேவை இருக்கிறது. நாம் இலங்கையில் வடகிழக்கில் என்ன செய்யப்போகின்றோம், எமது அரசியல் நடவடிக்கைகள் எவ்வாறு நகர்த்தப்படப் போகின்றது, என்கின்ற விடயங்களை ஊடகங்களின் ஊடாக அரசிற்கு வெளியிடக் கூடாத அளவிற்கு எமது செயற்பாடுகளும் அமையவேண்டும். அப்போதுதான் எமது செயற்பாடுகளை இடையூறின்றி எம்மால் முன்கொண்டு செய்ய முடியும். இல்லாதுபோனால் எடுக்கப்படுகின்ற முடிவுகளை அவர்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். அதாவது செம்மலையில் ஒரு விநாயகர் ஆலயம் இருக்கின்றபோது அந்த இடத்தில் ஒரு பௌத்த விகாரையை அமைத்திருக்கிறார்கள். நீதிமன்ற உத்தரவினையும் மீறி இறந்த பௌத்த பிக்குவின் சடலத்தை ஆலயம் அமைந்திருந்த பகுதியில் எரித்தார்கள்.

தொல்பொருள் ஆராய்ச்சிகள் என்ற வகையில் நாயாறு, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் என கைவைத்து இன்று யாழ்ப்பாணத்தில் களமிறங்கியிருக்கிறார்கள். சிங்களவர்கள் மேய்ச்சல் தரைகளைக் கையகப்படுத்தும் நோக்கில் கிழக்கில் இன்று செயற்பட்டு வருகிறார்கள். அப்பாவித் தமிழர்களுடைய மாடுகள் கொல்லப் பட்டிருக்கின்றன. கிழக்கில் விவசாயத்தை மேற்கொள்ளும் மக்கள், கால்நடைகளை வளர்ப்பவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கிறார்கள். அங்கு இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், பிள்ளையான், கருணா அம்மான் போன்றோரும், வடக்கில் அங்கஜன் இராமநாதன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, காதர் மஸ்தான் போன்றவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் அரச கைக்கூலிகளாக இருக்கிறார்கள். அரசுடன் இணைந்திருந்தும் இவ்வாறான அத்துமீறல்களைத் தடுப்பதற்கு எதுவுமே செய்யத் திராணியற்றவர்களாக இவர்கள் இருக்கிறார்கள். அரச தரப்பினை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். தமிழர்நிலம்பறிபோகிறது. திட்டமிட்டு தமிழர் பிரதேசங்களில் சிங்கள மக்கள் குடியேற்றப்படுகிறார்கள். இவ்வாறான பிரச்சினைகள் நடக்கின்றபோது தமிழ் மக்களாகிய நாம் தொடர்ந்தும் கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது சிறந்ததொன்றாக அமையாது. தமிழ் பேசும் அரசியல்வாதிகள் இனியாவது ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

அடக்குமுறைகளிலிருந்து தமிழினம் மீள வேண்டும். கிளர்ந்தெழவேண்டும். அஹிம்சை வழியிலான போராட்டங்கள் இன்னும் புதிய உத்வேகத்துடன் ஆரம்பிக்கப்படவேண்டும். ஊடக அடக்குமுறைகள் நிறுத்தப்படவேண்டும். இங்கிருக்கக் கூடிய இலங்கையரசு சார்ந்து வேலை செய்பவர்கள், தொல்பொருள் ஆராய்ச்சிகளை மேற்கொள்பவர்களால் ஊடகவியலாளர்கள் தடை செய்யப்படுகிறார்கள். உரிய முறையில் செய்திகளை சேகரித்து மக்களுக்கு கூறமுடியாதுள்ளது. அண்மையில் குருந்தூர் மலைக்கு சென்ற ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுப்பும், 30இற்கு மேற்பட்ட வாகனப் படையணியுடன் இராணுவமும் பொலிசாரும் அமைச்சரும் சென்று பௌத்த அடையாளங்களை வைப்பதற்கும் கொடிகளை நாட்டுவதற்கும் இந்நாட்டில் அனுமதி வழங்கப்படுகிறது. இவையெல்லாம்மீண்டும்தமிழரை அடக்கவேண்டும். கிளர்ச்சிகளை ஏற்படுத்தவேண்டும் என்கிற சிங்கள தேசத்தின் திட்டமிட்ட நடவடிக்கைகளாகத்தான் நாம் பார்க்கிறோம்.

ஒரு இனத்தை அடக்கியாளுகின்றபோது யுத்தம் ஆரம்பமாவதற்கான வாய்ப்புக்கள் இருக்கிறது. இந்த நாட்டினுடைய ஜனாதிபதியான கோட்டபாய அவர்கள் ஒரு நிதானமான முடிவினை எடுக்கவேண்டும். ஒரு பக்கம்கொரோனாவைரசினுடைய தாக்கம். இதனைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இனவாத நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடாது. தமிழர் பிரதேசங்களில் தொல்பொருள் ஆராய்ச்சிகள் என்ற போர்வையில் வருகின்றவர்களை அடித்து விரட்டுகின்ற நிலைமைகள் தான் எதிர்காலத்தில் உருவாகப்போகிறது. அதில் மாற்றுக் கருத்தில்லை. இந்த செயற்பாட்டைத் தான் ஜனாதிபதியும் பிரதமரும் விரும்புகிறார்களா? என்பது கேள்விக்குறி. இனிவரும் காலங்களில் அஹிம்சை ரீதியான போராட்டங்கள் இன்னமும் தீவிரம் பெறும்.

யுத்தம் நிறைவடைந்து 11 ஆண்டுகளைக் கடந்துள்ளது. ஆனால் இதுவரை தமிழ் மக்களுக்கானத் தீர்வுகளை வழங்க அரசு தயங்குகிறார்கள் என்றால் சிங்கள இனவாதம் இந்நாட்டில் தலைதூக்கி தமிழினத்தை வேறு பாதைக்கு திசைதிருப்பப் போகிறார்கள் அல்லது சிறுபான்மையினரை அடிமைப்படுத்தி அடக்கி ஒடுக்குகின்ற நிலைமைகளை இவர்கள் ஏற்படுத்தப் போகின்றார்கள் என்பதே அர்த்தமாகும். ஆகவே அரச கைக்கூலிகளாகச் செயற்படும் தமிழ் அரசியல்வாதிகள் உடனடியாக அரசியலிலிருந்து வெளியேற வேண்டும்.

தமிழ்மக்களும்ஒரு குடையின் கீழ் இணைந்து செயற்படவேண்டும். குழப்பங்களைஉருவாக்குவார்கள். எனினும் அஞ்ச வேண்டிய தேவை இல்லை. தமிழ் மக்களாகிய நாம் நாட்டினுடைய அரசியல் சூழ்நிலைகளைப் புரிந்துகொண்டு இனிவரும் காலங்களில் செயற்படுவோம்.

**இரணியன்**

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## அடக்குமுறைக்குள் சிக்கித் தவிக்கும் தமிழினம்

இலங்கை சுதந்திரமடைந்த காலந்தொட்டு பெரும்பான்மை சிங்கள இனத்தால் சிறுபான்மை இனமாகிய தமிழினம் அடக்குமுறைக்குள்தான் சிக்கித்தவித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே தற்போது வரை அடக்குமுறைகள் என்பது தமிழினத்திற்கு ஒன்றும் புதிதல்ல. அடக்குமுறைகளை உடைத்தெறிந்து சுதந்திரக் காற்றை சுவாசிக்க அஹிம்சை, ஆயுதம் என உச்சக்கட்ட அளவில் போராடிய ஒரு இனமும் தமிழினம் தான். இனத்தின் விடுதலைக்காக தமிழீழ விடுதலைப்புலிகள் என்கிற அமைப்பு பிரபாகரன் காட்டிய பாதையில் போராடியது. அடக்குமுறையின் விளைவாக ஆயுதம் ஏந்தினர் தமிழ் இளைஞர் யுவதிகள்.

இலங்கையரசிற்கு எதிராக போராடிய தமிழினத்தை இறுதியில் உலக நாடுகளின் துணைகொண்டு அடக்கி முடித்தது இலங்கையரசு. 2009ஆம் ஆண்டில் இவ் யுத்தம் நிறைவுக்கு வந்து சுமார் 11 வருடங்களைத் தற்போது கடந்து நிற்கும் இந் நிலையிலும் தமிழ் மக்களுக்கான விடுதலை என்பது கிட்டவில்லை. பேச்சுவார்த்தைகளின் மூலமாக தீர்வினைத் தருகிறோம் என அழைத்துப் பேசிய நாடுகள் தமது நலனைப் பார்த்தனவே தவிர, தமிழ் மக்களுக்கு எந்தவிதமான தீர்வினையும் பெற்றுக் கொடுக்கவில்லை. தமிழர்களின் பிரச்சினையில் தமது அரசியலை வளர்த்தார்களே தவிர வேறெதையும் செய்யவில்லை.

யுத்த காலத்தில் இடம்பெற்றதை விட யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் தமிழினம் வடகிழக்கில் அரசின் நன்கு திட்டமிடப்பட்ட மறைமுக மற்றும் நேரடியான அடக்குமுறைகளுக்கு முகங்கொடுக்கிறது. கடந்த 30 வருடங்களுக்கு மேலாக வடகிழக்கிற்கு விஜயம் மேற்கொள்ள முடியாமல் இருந்த பௌத்த பிக்குகள் தற்போது வடகிழக்கினை நோக்கி படையெடுத்து வருவதையும், இலங்கையின் தொல்பொருள் திணைக்களங்களின் உதவியுடன் பொலிசாரின் அனுசரணையில் வடகிழக்கில் இருக்கக்கூடிய தமிழர் பிரதேசங்களிலுள்ள மலைகளை, ஆறுகளை, காடுகளை, காணிகளை அபகரிப்புச் செய்வதை நோக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர். வளமிக்க பகுதிகளை கையகப்படுத்துதல் பிரதான நோக்கமாகும்.

தட்டிக்கேட்டு நிறுத்த தமிழினத்திற்கு ஏற்ற உரியவர்கள் இல்லாமையின் காரணமாக இன்று தமிழினம் செய்வதறியாது வெறுமனே அஹிம்சை ரீதியான போராட்டங்களை அங்கொன்றும் இங்கொன்றுமாக செய்து வருகின்றது. கடந்த கால அடக்குமுறைகளின் வெளிப்பாடுதான் ஆயுதப் போராட்டங்கள். மீண்டும் இந்நாடு ஒரு அழிவைச் சந்திக்கவேண்டும் என அரசு விரும்புகிறதா என்பதே தற்போதுள்ள பிரதான கேள்வி.

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்




பெருந் தெருக்களில் பெருந்தெருக்களும் ஏனைய தெருப்பாதைகளும் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. இவற்றின் வழியே பாசிஸ்டுக்கள் முன்னணி வரிசைக்குத் தமது பொருட்களையும் ஆளணிகளையும் கொண்டு செல்கின்றனர். இந் நகர்வைச் சிதறடித்து, பொருட்களையும் போக்குவரத்து ஊடகங்களையும் அழிப்பதனால், நீ எதிரியின் விநியோக முறையமைப்பைச் சீர்குலைக்கின்றாய், குறித்த சமர் நடவடிக்கையை எதிரி மேற்கொள்ள இடையூறு விளைவிக்கின்றாய், குறித்த சமர் நடவடிக்கையை எதிரி மேற்கொள்ள இடையூறு விளைவிக்கின்றாய், போர்க்களத்தில் எதிரியுடன் சமரிடுகின்ற செஞ்சேனைப் படைப்பிரிவுகளுக்குப் பாரிய உதவியளிக்கின்றாய்.

பாசிஸ்டுக்கள் தமது போக்குவரத்திற்கு உச்ச பாதுகாப்பு வழங்குகின்றனர். அவற்றை உந்துருளி வீரர்கள் அழைத்துச் செல்கின்றார்கள். ஒழுங்குபடுத்தப்பட்ட ரோந்து மேற்கொள்ளப்படுகின்றது. மிக முக்கியமான பாதைகளில் காப்பளிக்கின்ற முகாம்கள் அடைக்கப்பட்டிருக்கின்றன. காவலணிகளும் இரகசிய அணிகளும் நிறுத்தப்படுகின்றன. இரவுப் பொழுதுகளில் பாதைகளுக்கு வெளிச்சக் குண்டுகளால் ஒளி பாய்ச்சப்படுகின்றது. பெருந் தெருக்களிலும் ஏனைய தரைப்பாதைகளிலும் பதுங்கித் தாக்குதலை மேற்கொள்ளும் போது, மேற்கூறியவற்றைக் கவனத்திலெடுத்துக் கொள்.

இவ்வாறான பதுங்கித் தாக்குதலில் கெரில்லாக்களின் செயற்பாடுகள், புகை வண்டிப் பாதையில் மேற்கொள்கின்ற பதுங்கித் தாக்குதல் செயற்பாடுகளினது பொதுவான பண்புகளைக் கூடியளவில் கொண்டிருக்கின்றன. ஆனால் இங்கே சில சிறப்பியல்புகள் இருக்கின்றன. பெருந்தெரு ஏனைய தெருப்பாதைகள் ஆகியன கணிசமானளவு கூடுதல் ஒடுக்கமானவையாகும். இவை பதுங்கித் தாக்குதலை நடத்துவதற்கு வசதியானதாகும். இங்கே பதுங்கித் தாக்குதலைப் பாதைக்குக் கண்ணிவைத்தல் பாதையில் பொறிகிடங்கு தோண்டுதல் தடைகளை உருவாக்குதல், சிறிய மரப்பாலங்களை அழித்தல், ஏனைய ஆறுகளையும் சதுப்பு நிலங்களையும் கடக்கும் வழிகளை அழித்தல் போன்றனவற்றுடன் மேற்கொள்ளலாம்.

பதுங்கித் தாக்குதலிற்கு மிகவும் பொருத்தமான இடம் - அடர்ந்த காட்டிடையேயான சாலை, சதுப்புநிலக் கடப்பிற்கான பாதை, உயர்ந்ததும் ஆபத்தானதுமான அணைக்கட்டுக்கள் போன்றன வாகும். இவ்வாறான இடங்களில் கண்ணி வைப்பதே மிகவும் சிறந்ததாகும். முதலாவது வாகனம் கண்ணியில் அகப்படும் போது வாகன நெரிசல்நிலை தோற்றுவிக்கப்படுகின்றது. மற்றைய வாகனங்கள் அதனைக் கடந்து செல்லமுடியாத நிலையும் உருவாகின்றது.

மீளத்திரும்பிச் செல்லவும் பின்னால் இருக்கின்ற வாகனம் இடந்தராது. இவையாவும் எதிரியின் ஆளணியையும் அவனது போக்குவரத்து வாகனங்களையும் பொருட்களையும் அழிப்பதை இலகுவாக்குகின்றன. ஒடுக்கமான இடத்தையும்வளைவுகள் அல்லது திருப்பங்களையும் பதுங்கித் தாக்குதலிற்காகத் தெரிவுசெய்வதே சாலச்சிறந்ததாகும். இவ்வாறெனில் கெரில்லாக்களால் தொடரணியின் முன்பகுதியையும் பின்பகுதியையும் பார்க்க முடிவதோடு, சுடவும் முடிகின்றது.

இந்நிலைமையில் ஒரேநேரத்தில் முன்னுக்குச் செல்கின்ற வாகனத்தையும் பின்னுக்கு வருகின்ற வாகனத்தையும் சிதறடிக்க அல்லது அவற்றின்மேல் கையெறி குண்டுகளை வீச வேண்டும். இப்பொழுது ஏனைய வாகனங்கள் மிக நெருக்கடியான நிலைக்கு உள்ளாகின்றதுடன், அவற்றின்மேல் தாக்குதல் தொடுப்பதும் இலகுவாகின்றது. வாகனங்கள் பக்கங்களிற்குத் திரும்பாமலிருப்பதற்காக தாக்குதல் நடத்தப்படுகின்ற இடத்திலுள்ள பாதையின் இருமருங்கிலும் கண்ணிகள் புதைக்கப் படவும் வேண்டும். நகர்வுப் பதுங்கித் தாக்குதல் முறையைப் பயன்படுத்துவதும் மிக நல்லதாகும். இதற்காக வீதியின் சில இடங்களில் கண்ணிகளைப் புதைக்க வேண்டும்.

குறிப்பாக, இரண்டு சமாந்தர வீதிகள் ஒன்றுக்கொன்று குறைந்த தூரத்தில் இருக்கின்றபோது இதனை மேற்கொள்வது வசதியாக இருக்கும். ஒரு இடத்தில் எதிரியின் போக்குவரத்துத் தொடரணிக்கு இழப்பை ஏற்படுத்திவிட்டு கெரில்லாக்கள் வேகமாக மற்றைய பகுதிக்கு அல்லது அருகிலுள்ள வீதிக்குச் சென்று அங்கே எதிரி மீதான தாக்குதலை மீளத் தொடர்வார்கள். இது எதிரியைத் தவறான நம்பிக்கைக்கு இட்டுச் செல்கின்றது. ஒரு குழு மாத்திரமன்றி பல கெரில்லாக் குழுக்கள் (பல பாதைகளிலும் பல திசைகளிலும்) செயற்படுகின்றதென்ற உணர்வு அவர்களுக்கு ஏற்படுகின்றது.

கெரில்லாக்களைப் பின்தொடர நியமிக்கப்பட்ட எதிரிப் படைகள், தாங்கள் சரியாக எங்கே செல்ல வேண்டும் என்பதைத் தெரியாத நிலைக்குள்ளாகின்றனர். சமர்ப் பணிகளை நிறைவேற்றிய பின்னர், கெரில்லாக்களாலோ இலகுவாகத் தப்பித்துக்கொள்ள முடிகின்றது. எதிரியின் வாகனப் போக்குவரத்துத் தொடரணியை நாசமாக்கிவிட்டு, அவதானமாக வாகனங்களையும் வண்டிகளையும் பாசிஸ்டுக்களின் உடலங்களையும் பரிசோதி. சகல ஆவணங்களையும் கடிதங்களையும் பத்திரிகைகளையும் எடுத்துக்கொள். சாத்தியத்தைப் பொறுத்து இராணுவப் பொருட்களை உன்னுடன் எடு, எடுத்துக்கொள்ள முடியாதவற்றை அழித்துவிடு.

பதுங்கித் தாக்குதலிற்கான செயற்பாடுகளின் போது கெரில்லாக்கள் தனித்தனியான குழுக்களாகப் பிரிக்கப்படுகின்றனர். ஒரு குழு வேவெடுக்கின்றது. மற்றையது நேரடியாகப் பதுங்கித் தாக்குதலுக்கான செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. மூன்றாவது குழு காப்பளிக்கின்றது. குழுப் பொறுப்பாளன் ஒவ்வொரு கெரில்லாவுக்கும் குறித்த பணியை வழங்குகின்றான்.

சகலரும் தாக்குதலை ஆரம்பிப்பதற்கான பின் வாங்குவதற்கான சைகைகளையும் ஏனைய பிற சைகைகளையும் அறிந்திருக்க வேண்டும். நெருங்கி வந்த எதிரிப்படைத் தரப்பின் திகைப்புத் தாக்குதலுக்கு ஆளாகமலிருப்பதற்காகச் சகல நடவடிக்கை நிகழ்வின் போதும் அவசியம் வேவு பார்க்க வேண்டும். பெருந்தெரு அல்லது ஏனைய தெருப்பாதைகளில்மேற்கொள்கின்ற பதுங்கித் தாக்குதலின் போது ,இலகுவாகக் கைதியைப் பிடிக்கலாம் என்பதை நினைவிற்கொள். கைதியை விரைவாகச் சமர்க்களத்திலிருந்து வெளியேற்றி விடு.

மக்கள் வாழ்விடத்தில் எதிரிமீது தாக்குதல் இது கெரில்லாக்களின் செயற்பாடுகளில் மிகவும் கடினமான வகையாகும். இங்கே ஒரேநேரத்தில் எதிரியின் பல்வகையான இலக்குகளை அழிக்க வேண்டியேற்படுகின்றது. எடுத்துக்காட்டாக பாசிசப் படைகளின் படைப்பிரிவுக் கட்டளையகம் அமைந்துள்ள மக்கள் வாழ்விடமொன்றில் கட்டளையகத்தை மாத்திரம் அழிப்பதோடு நின்றுவிடாது அதனது பணியகங்களையும் அழிக்க வேண்டும். தொடர்பு நிலையங்கள், கள மின்னுற்பத்தி நிலையம், களஞ்சியங்கள், திருத்தச்சாலைகள், வாகனத்தரிப்பிடங்கள், எரிபொருள் களஞ்சியங்கள் போன்றனவே அவையாகும்.

**தொடர்வான்...**

**நெற்றிப்பொறியன்**

# ஜனாஸா எரிப்பு விவகாரமும் இலங்கை மீதான அரபு நாடுகளின் சிவப்பு அறிக்கையும்

சீனாவின் கடந்த 2019 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் உருவாகிய கொரோனா வைரஸ் என்ற கொடிய உயிர்கொல்லி நோயானது 2021ல் வீரியம் பெற்று உருமாறி பெரும் மனிதப் பேர் அவலத்தை ஏற்படுத்தி வருகின்றது. இப் பத்தி எழுதும் வரை உலகில் சுமார் இவ் வைரஸ் நோயினால் 21 இலட்சம் மக்கள் பலியாகியுள்ளமை ஓர் மிகப்பெரும் துயரச் சம்பவம் ஆகும். உலகின் அசைக்க முடியாத வல்லரசாக திகழும் அமெரிக்கா இவ் வைரஸால் கடுமையாக பாதிக்கப்பட்டு திணறி வருகின்றது வல்லரசுகளின் வரிசையில் ரஸ்யா, பிரித்தானியா, பிரான்ஸ், இந்தியா போன்ற நாடுகள் கொரோனா தொற்று நோயால் சிக்கி சின்னாபின்னமாகி வரும் நிலையில் தற்பொழுது பிரித்தானியா உருமாறிய கொரோனா தொற்றால் பேறழிவைச் சந்தித்து வருகின்றது.

இப்படி உலகம் திணறி வரும் நிலையில் இலங்கையில் இவ் வைரசானது 2020 பெப்ரவரி இறுதிப்பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டு நாடு முழு இறுக்கமான நடைமுறை காரணமாக முதலாம் அலை பாரிய அழிவுகள் இன்றி மக்கள் காப்பாற்றப்பட்ட நிலையில் கொரோனாவின் இரண்டாம் அலையானது 2020 செப்டம்பர் மாதம் இறுதி பகுதியில் மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் உருவாகி அதன் தாக்கம் பேலியகொடை மீன்சந்தையை ஊடுருவி சிறைச்சாலை என பல கொத்தணிகளை உருவாக்கி இப்பத்தி எழுதும் வரை சுமார் 56 ஆயிரம் பேர் இவ் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டும் 280 பேர் மரணமடைந்த நிலையில் வைத்தியசாலைகளில் 7,800 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மினுவாங்கொடை - பேலியகொடை - சிறைச்சாலை கொத்தணியான இவ் முக்கொத்தணியில் மட்டும் 49000 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ள நிலையில், தற்பொழுது இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் இவ் வைரஸ் நோய்த் தாக்கமானது அதிகரித்து செல்வதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. நாட்டில் தற்பொழுது சமூகத்தொற்று பரவ தொடங்கியுள்ளதாக ஆளுங்கட்சி உறுப்பினர் உட்பட சுகாதாரப் பிரிவினர் எச்சரிக்கை செய்து வரும் நிலையில், சுகாதார அமைச்சர் இன்னும் சமூக பரவலுக்கு உட்படவில்லை என்று கூறி வருகின்றார். கொழும்பு மேல் மாகாணங்களை தாண்டி தற்பொழுது வடகிழக்கு மாகாணங்களில் இதன் வீச்சு அதிகரித்து காணப்படுகின்றது.

இந்நிலையில் இந் நோய்த்தொற்று தாக்கம் காரணமாக மரணிக்கும் உடல்களை தகனம் செய்யும் நடைமுறையை இலங்கை மிக இறுக்கமாக கடைப்பிடிக்கும் நிலையில், எமது நாட்டில் வாழும் சிறுபான்மை இனமான முஸ்லீம் மக்களின் ஜனாஸாக்கள் அவர்களின் மத நம்பிக்கையின் பிரகாரமும், மத அனுஸ்டானங்களின் படியும் அவர்களின் புனித நூலான குர்ஆனில் குறிப்பிடப்பட்ட படியும் இறந்த தமது உறவுகளின் ஜனாஸாக்களை அடக்கம் செய்து வந்த நிலையில், தற்பொழுது கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு மரணமடையும் முஸ்லீம் மக்களின் உடல்களை எரிப்பதானது அவர்களின் சமய அனுஸ்டானங்களையும், அவர்களது மத அடிப்படை உரிமைகளையும் மீறும் செயலாகும்.

கொரோனா நோய்த் தொற்று உள்ளாகி இறக்கும் சரீரங்களை அடக்கம் செய்வதால் நிலத்தடி நீர் மாசடைவதுடன் நிலத்தடி நீரினுள் இவ் வைரசானது கலக்க வாய்ப்புள்ளதாகவும் அதனால் இறக்கும் உடலங்களை எல்லாம் நாட்டையும் மக்களையும் பாதுகாக்கும் நோக்கில் இதையொரு தேசிய பேரிடராக கருத்தில் கொண்டு உடலங்களை தகனம் செய்வதாக அரசாங்கம் தெரிவித்து வருகிறது. இது இவ்வாறு இருக்கையில் அண்மையில் இடம்பெற்ற சம்பவம் இலங்கையில் வாழும் அனைத்து மக்களையம் மிகவும் கண்கலங்க வைத்தது. இவ் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட 20 நாளேயான முஸ்லிம் மதத்தை சேர்ந்த குழந்தையொன்று மரணித்தவேளை அக்குழந்தையின் உடலும் பெற்றோரின் எதிர்ப்பை மீறி தகனம் செய்யப்பட்டது. இது அனைவரையும் மிகவும் வேதனைப்படுத்திய விடயமாக பார்க்கப்பட்டது. எமது நாட்டின் இன மத மொழிக்கு அப்பால் இறக்கும் சிறு குழந்தைகளை அடக்கம் செய்வது தான் இலங்கை நாட்டின் மரபு. ஆனால் அதையும் பொருட்படுத்தாது கொரோனா வைரஸை காரணம் காட்டி அப் பிஞ்சு குழந்தையின் உடலை தகனம் செய்து அனைத்து மக்களின் அதிருப்தியை சந்தித்தது இந்த கோட்டபாய அரசு. 2019ஆம் ஆண்டு ஆட்சியை கைப்பற்றிய கோட்டபாய தலைமையிலான பொதுஜன பெரமுன கட்சியானது பெரும்பான்மை இனத்தின் ஆதரவுடன் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது தொடக்கம் சிறுபான்மை இனமான தமிழ் முஸ்லீம் இனங்கள் மீதான தமது இராணுவ அடக்குமுறைகளை திணித்து வருவதை அவதானிக்க முடிகிறது. அத்துடன் அடுத்து வந்த பாராளுமன்ற தேர்தல்களிலும் 2/3 பெரும்பான்மை பலத்தை பெற்று பிரதமராக மகிந்த ராஜபக்ச அவர்கள் ஆட்சிபீடம் ஏறியதை தொடர்ந்து இவ்வாறான இன அடக்குமுறையானது மிகவும் வீரியம் பெற்று வருவதை அவதானிக்க முடிகிறது.

அதன் ஒரு கட்டமாக இஸ்லாமிய மக்களின் மத அனுஸ்டான உரிமைகளை தடுப்பதனை பார்க்க முடிகின்றது. இன்று உலகில் 176 நாடுகளில் இவ் வைரஸ் நோயில் மரணிக்கும் உடல்களை அந்தந்த நாட்டு மக்களின் விருப்பப்படி தகனம் செய்யவோ அல்லது அடக்கம் செய்யவோ எவ்வித தடையும் இல்லாத நிலையில் இவ் நாடுகளின் வரிசையில் சீனாவும், இலங்கையும் விதிவிலக்காக இவ்வாறான அடக்குமுறைத்தனமான இன பழிவாங்கல் நோக்கோடு செயற்படுகின்றன. உலகில் உள்ள சுகாதார ஆராய்ச்சியாளர்களும் மற்றும் நோய்த்தொற்றியல் பாதுகாப்பு பிரிவினரும் ஆட்கொல்லி வைரஸ்களின் ஆராய்ச்சியாளர்களுக்கும் இறந்த கொரோனா வைரஸ் நோயாளிகளின் உடல்களை அடக்கம் செய்வதில் எந்தவித பிரச்சினையும் இல்லையென்ற நிலையிலும் இலங்கை அரசானது அடம்பிடித்து இவ்விடயத்தில் விடாப்பிடியாக நிற்பதானது உண்மையில் ஓர் இனத்தின் மீதான அடக்குமுறையை பிரயோகிக்கிறது என்பதில் மாற்றுக்கருத்தில்லை.



இன்று இவ் வைரஸால் இறந்தவர்களில் அதிகமானவர்கள் இஸ்லாமிய இனத்தவர்கள். அவர்களின் உடலங்கள் அனைத்தும் அவர்களின் உறவினர்களின் அவர்களின் இனத்தவர்களின் எதிர்ப்பையும் மீறி அவர்களின் இறுதி மத அனுஸ்டானங்கள் எல்லாம் குழிதோண்டி புதைத்துவிட்டு, தனது பௌத்த மேலாதிக்க சிந்தனையையும் பெரும்பான்மையினம் எனும் அடையாளத்தையும் வைத்துக் கொண்டு இறந்த அனைத்து இஸ்லாமியர்களின் உடல்களையும் தகனம் செய்து தனது பேரினவாத முகத்தை காட்டி நிற்கின்றது. இலங்கையில் ஆள்வீத வருமானத்தில் இஸ்லாமிய இனமானது முன்னிலையில் உள்ளது. அத்துடன் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கின்றது. அது மட்டுமன்றி கடந்த 30 வருடங்களாக இடம்பெற்ற தமிழினத்தின் உரிமைப்போராட்டத்தின் வீழ்ச்சி வரைக்கும் அது மௌனிக்கும் வரைக்கும் தமக்கு உறுதுணையாக நின்று பல வழிகளிலும் உதவி புரிந்த இனமாக தற்போதைய சிங்களத் தலைமைகள் வரை புகழ்ந்து வந்த இனம். சிங்களத் தலைமைகளின் சூழ்ச்சி புரியாமலும், தமது பொருளாதார வளர்ச்சித் தன்மையில் குறியாக இருந்து இனத்தால் வேறுபட்டாலும் மொழியால் ஒன்றிணைந்த தமிழின அழிவுக்கு இவ் இஸ்லாமிய இனம் சோரம் போனதை தமிழினம் என்றும் மறக்காது. தமக்கு இந்நிலை திரும்பி வரும் என அவர்கள் நினைக்கவில்லை. 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதலுடன் இஸ்லாமிய இனத்தின் மீதான தனது கோரமுகத்தை சிங்கள இனவாத அரசு திருப்பியுள்ளது. சலுகை அரசியலுக்கும், தமது வியாபார அரசியலுக்கும் மாறி மாறி வந்த சிங்கள தலைமைகளுடன் ஒட்டியொட்டி உறவாடிய முஸ்லிம் இனத்தின் அரசியல் தலைமைகள் தமது இனத்தின் இறுதி நிகழ்வைக்கூட தமது மதக் கொள்கையின்படி செய்ய முடியாமல் கையறு நிலையில் இருப்பதை பார்க்க முடிகின்றது. எப்பொழுதும் தமது சுயநல இலாபத்திற்காக அரசியல் செய்யும் தமிழ் - முஸ்லிம் இன அரசியல் தலைமைகள் இருக்கும் வரை சிங்கள ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறை தொடர்ந்து கொண்டு தான் இருக்கும். இன்றுகூட கோட்டபாய அரசின் ஆட்சியில் நீதி அமைச்சராக ஓர் இஸ்லாமிய இனத்தவர் இருக்கிறார் இதுவொரு மிக வேடிக்கையான விடயம். நாட்டின் நீதி அமைச்சராக இருந்துகொண்டு தமது இனத்தின் நீதியைக்கூட பெற முடியாத கையாளாகாத அமைச்சை அலங்கரித்துக்கொண்டிருக்கும் அவலம் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழர்களின் போராட்டத்தின் உண்மைத்தன்மை, அவர்களின் போராட்டத்திற்கான காரணம் குறித்து இஸ்லாமிய இனத்தின் அரசியல் தலைமைகளுக்கு இப்பொழுது புரியும்.

இனம் அடக்கப்படும் பொழுது இனத்தின் உரிமையை பாதுகாக்க வேறு வழியின்றி இடம்பெற்றதே 30 வருட யுத்தம். 30க்கும் மேற்பட்ட முஸ்லீம் இனத்தின் அரசியல் தலைமைகள் இருந்தும் பிரயோசனம் அற்ற நிலை. மிக பலம் பொருந்திய எண்ணெய் வள நாடுகளைக்கொண்ட 50க்கும் மேற்பட்ட இஸ்லாமிய நாடுகள் இருந்தும் இங்கு வாழும் இஸ்லாமிய மக்களின் மத அனுஸ்டானங்கள் ஒடுக்கப்படும் பொழுது எதுவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் இவ் இஸ்லாமிய நாடுகளால் எடுக்க முடியாமல் உள்ளது. இந்நிலையில் பிந்திய ஒரு செய்தி வந்துள்ளது. அதாவது 48 இஸ்லாமிய நாடுகள் இலங்கைக்கு எதிராக சிவப்பு அறிக்கை வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இங்குள்ள முஸ்லிம் தலைமைகள் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானிடம் இங்கு நடக்கும் ஜனாஸா எரிப்பு விவகாரத்தில் தலையிட்டு அரசுக்கு ஓர் அழுத்தத்தை கொடுத்து அரசை இணங்க செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளதாகவும் தெரிய வருகின்றது. இந்நிலையில் பாகிஸ்தான் பிரதமரான இம்ரான்கான் அவர்கள் பெப்ரவரி இறுதிப்பகுதியில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவரின் பயணம் ஒரு மாற்றத்தை எற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏனெனில் இலங்கையில் நடைபெற்ற இறுதி யுத்தத்தில் தமிழின அழிப்பின் இறுதி அத்தியாயத்திற்கு மிகப்பெரும் இராணுவ தளபாட உதவிகள் வழங்கிய நாடுகளில் மிக முக்கிய நாடாக பாகிஸ்தான் விளங்குகின்றது. அத்துடன் இன்னுமொரு விடயம் இங்கு கூர்ந்து நோக்கப்படவுள்ளது. பாகிஸ்தானின் இலங்கை விஜயத்திற்கு பின்னால் சீனா உள்ளது.

பாகிஸ்தான் மீது அமெரிக்கா பொருளாதார தடையை விதித்த பொழுது சீனா பல உதவிகளை பாகிஸ்தானுக்கு செய்து வருகிறது. அண்மையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரின் இலங்கை பயணத்தின் பின்னர் சீனா - பாகிஸ்தான் பிரதமரை இலங்கைக்கு அனுப்பி தனது இராஜதந்திர காய் நகர்த்தலை மேற்கொள்ள முனைகின்றது. சீனா, தற்பொழுது அமெரிக்காவிலும் புதிய ஜனாதிபதி பதவியேற்ற நிலையில் அவரது இலங்கை தொடர்பான நிலைப்பாடு வருவதற்கு முன்னர் இலங்கையில் தனது நிலையை பலப்படுத்த நேரடியாகவும் அதேவேளை தனக்கு ஆதவான, தான் ஆதரவளிக்கின்ற பாகிஸ்தானை இலங்கைக்கு அனுப்பி ஒரு கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கும் செயலில் இறங்கியுள்ளது. ஒன்று அங்குள்ள முஸ்லிம் மக்களின் ஜனாஸா விவகாரம் - அடுத்து இந்தியாவை அச்சுறுத்தும் செயல்பாடு என சீனா மிக இலாவகமாக தனது இராஜதந்திர செயற்பாட்டை செய்து வருகிறது.

தற்பொழுது இங்குள்ள கேள்வி என்னவெனில் 48 இஸ்லாமிய நாடுகளின் சிவப்பு அறிக்கை - பாகிஸ்தான் பிரதமரின் வருகை என இடம்பெறவுள்ள நிலையில் ஜானஸா எரிப்பு விவகாரத்தை கோட்டபாய அரசு எவ்வாறு எதிர்கொள்ளப்போகின்றது. அடிபணிந்து அடக்க செய்வதற்கு அனுமதியளிக்குமா? அல்லது சீனா - இந்தியா - அமெரிக்கா போன்ற நாடுகள் தமக்கு ஒத்தாசையில் இருக்கும் என்ற ரீதியில் இஸ்லாமிய நாடுகளை எதிர்க்குமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். அத்துடன் வரும் மார்ச் மாதம் ஐ.நா சபையில் கொண்டுவரவுள்ள தமிழ் மக்களின் தீர்மானத்திற்கு உலக நாடுகளின் நிலை எவ்வாறு இருக்கப்போகின்றது என்பதில் அரசு கவனம் செலுத்தி வருவது தெரிகின்றது.

கடந்த வருடங்களில் ஐ.நா சபையில் கொண்டுவரப்பட்ட தமிழ்த் தரப்பு தீர்மானங்களுக்கு எதிராக பாகிஸ்தான் உட்பட பல இஸ்லாமிய நாடுகள் இலங்கையை உறுதுணையாக நின்று காப்பாற்றியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. ஆகவே மார்ச் மாதம் இடம்பெறவுள்ள ஐ.நா கூட்டத்தொடரிலிருந்து தப்புவதற்காக இஸ்லாமிய இன மக்களின் ஆதரவை பெற இங்குள்ள இஸ்லாமிய மக்களின் கொரோனா தொற்றால் மரணிக்கும் இஸ்லாமியர்களின் உடல்களை அடக்க அரசு அனுமதியளிக்கும் என எண்ண முடியும். அரபு நாடுகளை விட இலங்கை, சீனா - அமெரிக்கா - பிரிட்டன் - ரஸ்யா போன்ற நாடுகளை தனக்கு துணையாக வைத்துள்ளது. அத்துடன் இந்தியாவையும் அந்த சந்தர்ப்பத்தில் எப்படியாவது தனது பக்கசார்பாக திருப்பிவிடும் என்பதில் ஐயமில்லை. இனத்தால் வேறுபட்டாலும் மொழியால் ஒன்றுபட்ட தமிழ் - முஸ்லிம் இன மக்கள் ஓர் அணியில், ஒரே கொள்கை அடிப்படையில், சுயநல அரசியல் எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டு, சிங்கள பௌத்த பேரினவாத கொள்கையுடைய இவ் அரசுக்கு எதிராக தொடர்ந்தும் அகிம்சை ரீதியான போராட்டங்களை செயற்படுத்தி, மத மொழி கலாச்சார தன்மைகளை பேரினவாதத்திடமிருந்து பாதுகாத்துகொள்வதே ஒரே வழியாகும். புரிந்துகொண்டு செயற்படுவோமாக.

**தாயகத்தான்**

# சிங்கள பேரினவாத பெரும்பான்மை அரசியல் மீண்டும் ஜூலை கலவரத்தை நோக்கி...



இலங்கையில் பேரினவாத சிந்தனை கொண்ட அரசியல் தலைமைகள் சிறுபான்மை இனமான தமிழ் இனத்தை 1948 சுதந்திரத்தின் பின்னர் பல்வேறு வழிகளில் அடக்கியாள முற்பட்டது. 1958. 1968 என தமிழ் இனத்தின் மீதான வன்முறைகளை இலங்கை அரசின் பௌத்த பேரினவாத சிந்தனை கொண்ட அரசியல் தலைமைகள் கட்டவிழ்த்துவிட்டன. இவ்வாறான வன்முறைகளால் தமிழ் இனம் உயிர் உடைமைளை இழந்து நிர்க்கதியான நிலையில் அடுத்து தமிழ் இனத்தின் கல்வியில் கைவைத்து தரப்படுத்தல் முறையினை தமிழ் மாணவர்கள் மீது திணித்தது.

இவ்வாறு பல்கலைக்கழகத் தரப்படுத்தலால் வெகுண்டெழுந்த மாணவ சமுதாயம் அரசியல் ரீதியாகவும் அகிம்சை ரீதியாகவும் பேசிப் பயனில்லை என முடிவெடுத்து ஆயுதப் போராட்டத்தை நோக்கி தள்ளப்பட்ட நிலையில் இனவெறி அரசுக்கெதிராக வடகிழக்கு பகுதிகளில் சிறு சிறு குழுக்களாக இலங்கை இராணுவம் பொலிசார் மீது தமது எதிர்ப்பு தாக்குதல்களை அங்கொன்றும் இங்கொன்றுமாக மேற்கொண்டனர்.

தமிழ் இனத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராகவும் தமிழ் இனத்தின் இருப்பை உறுதி செய்யவும் ஆயுதக் குழுக்கள் ஆக இயங்கிய இளைஞர்கள் ஆயுதப் போராட்ட இயக்கங்கள் உருமாறின. தமிழ் மக்களின் விடிவுக்கான போராட்டத்தில் 5 இயக்கங்கள் உருவாகி செயல்பட்ட நிலையில் இதில் முதன்மையாக விடுதலைப்புலிகள் அமைப்பு காணப்பட்டது. இவ் அமைப்புக்களின் ஆயுத போராட்டத்தை நசுக்க இலங்கை இனவெறி அரசு பயங்கரவாத தடைச்சட்டத்தை பிரயோகித்து அப்பாவி இளைஞர்களை கைது செய்ததோடு கேட்பாரின்றி சுட்டுக்கொன்றது.

இவ் ஆயுதப் போராட்ட அமைப்புகளுக்கு அண்டை நாடான இந்தியா மிகப்பெரும் உதவிகளை தனது நாட்டின் பிராந்திய நலன் என்ற சுயநலத்திற்காக செய்தது. இக் காலகட்டங்களின் இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜெயவர்த்தன அவர்கள் பதவியில் இருந்தார். இவர் மிகப்பெரிய சர்வாதிகார போக்கும் பௌத்த பேரினவாத சிந்தனை கொண்டவராகவும் காணப்பட்டதுடன் இவரது அமைச்சரவையில் அமைச்சர்களாக இருந்தவர்கள் இவரை விட பௌத்த மத வெறியர்களாக காணப்பட்டனர். இதில் குறிப்பிடும்படியாக சிறில் மத்தியு. லலித் அத்துலத் முதலி. காமினி திசாநாயக்க. சேபக்கல ஆட்டிக்கல போன்ற பௌத்த மத வெறி பிடித்தவர்கள் இருந்த காலகட்டம் அது. 1983இல் யூலை 13ஆம் திகதி புகழ்பூத்த திருநெல்வேலியில் இலங்கை இராணுவம் மீது மேற்கொள்ளப்பட்ட விடுதலைப்புலிகளின் தாக்குதலில் 13 சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்ட நிலையில் அவ் உடல்கள் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டது. குடும்பத்தினரிடம் ஒப்படைக்காமல் அனைத்து இராணுவ வீரர்களின் உடல்களும் பொரளை கனத்தை மயானத்தில் வைக்கப்பட்ட நிலையில் அங்கு திட்டமிட்டு சிங்களக் காடையர்கள் கலவரம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ் மக்களுக்கு எதிரான கொலை வெறித்தாக்குதல் ஆரம்பமானது. இதற்கு தலைமை தாங்கியது சிறில் மத்தியூஸ் என கூறப்படுகின்றது. பல அப்பாவி தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். பலர் உயிருடன் எரிக்கப்பட்டனர். பலகோடி பெறுமதியான சொத்துக்கள் சூறையாடப்பட்டன. பல அப்பாவி பெண்கள் பாலியல் வல்லுறுவுக்கு அகப்பட்டனர். வெலிக்கடை சிறைச்சாலையில் அரசியல் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த குட்டிமணி தங்கத்துரை. ஜெகன் உட்பட 53 தமிழ் அரசியல் கைதிகள் சிங்களக் காடையர்களால் சிறைச்சாலைக்குள் வைத்து படுகொலை செய்யப்பட்டனர். தமிழர்கள் தென் பகுதியை விட்டு கையில் கிடைத்த பொருட்களுடன் கப்பல்களில் யாழ்ப்பாணம் நோக்கி வந்தனர்.

உண்மையில் இன்றுவரை சொல்லப்படுவது போல் இது இனக்கலவரம் அல்ல. நாம் இவ் சொற்பதத்தை பாவிப்பது பிழையான விடயம். இனக்கலவரம் என்றால் இரு இனங்கள் மோதுவது ஆனால் 1983 ஏற்பட்டது இனக்கலவரம் அல்ல. பௌத்த பேரினவாத தலைமைகளால் திட்டமிட்டு நடத்தப்பட்ட தமிழ் மக்கள் மீதான கொலை வெறி தாக்குதல் இதில் பெரும்பான்மையான சிங்கள மக்கள் அப்பொழுது பல தமிழ் மக்களை காப்பாற்றியுள்ளனர்.

இது பேரினவாத சிந்தனை கொண்ட நிறைவேற்று அதிகாரத்தை கொண்டு நாட்டின் தலைவர் எடுத்த கோர முடிவு. ஆகவே இது இனக்கலவரம் அல்ல. இனக்கலவரமாக சாயம் பூசப்பட்டது. கொலை வெறித் தாக்குதல் இடம்பெறும் பொழுது ஒரு ஊடகவியலாளரின் கேள்விக்கு அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர் அவர்கள் கூறிய விடயம் இது வடக்கில் உள்ள தமிழர்கள் என் மீது என்ன நினைப்பார்கள் என்று எனக்கு கவலை இல்லை. எனது சிங்கள மக்கள் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்பது பற்றித் தான் எனது கவலை. சிங்கள மக்களின் கோபத்தால் ஏற்பட்ட விளைவு என்று மிடுக்காகவும் ஆணவத்துடனும் கூறினார். கொலை வெறித் தாக்குதலை தடுக்க ஊரடங்கு உத்தரவைக் கூட பிறப்பிக்காமல் காலம் தாழ்த்தினார். அத்துடன் தமிழர்களை பார்த்து போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம் என்று தனது இனவாத கோரமுகத்தைக் காட்டினார். ஆனால் அதற்கு பின் நாட்டில் தங்களது பௌத்த மேலாதிக்க சிந்தனையையும் எத்தனையோ அப்பாவி சிங்கள மக்களும் அவர்களது பிள்ளைகளும் கோர யுத்தத்தில் மாண்டு போயினர். 1983 இல் தமிழர்கள் மீதான கொலை வெறிகள் முடியவில்லை. 1987. 1990களில் கிழக்கு மாகாணப் படுகொலைகள். செம்மணிப் படுகொலைகள் என பல படுகொலைகளும் இடம்பெற்றுள்ளன.

2009 ஆம் ஆண்டு உலக வல்லரசுகளின் துணையுடன் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் தமிழர்கள் மீதான படுகொலைகள் செயல்திட்டம் மாற்று வடிவில் வடகிழக்கு பகுதிகளில் அரங்கேறி வருகின்றன. 2019இல் முதல் கோட்டபாய அரசு ஆட்சி பீடமேறியதில் இருந்து இராணுவ அடக்குமுறையான தமிழர்களின் பகுதிகளில் வேகம் பெற்றுவரும் நிலையில் தமிழர்களின் பூர்வீக நிலங்களில் இனவாத அரசின் கண்கள் விழுந்துள்ளது.

கடந்த 30 ஆண்டு கால போரில் தமிழ் இனம் சொல்லொனா அழிவுகளை சந்தித்து வந்த நிலையில் அவர்களின் இருப்பிடத்தை இல்லாதொழிக்கும் கைங்கரியத்தில் ஈடுபடத் தொடங்கியுள்ளது. தமிழ் மக்களின் பொருளாதாரக் கட்டமைப்புக்களை சிதைத்தல் கல்வி வளத்தை அழித்தல். அவர்களின் இருப்பிடங்களை அபகரித்தல் அவர்களது சமய கலாச்சார பாரம்பரிய சின்னங்களை அழித்து அவர்களை வந்தேறு குடிகளாக மாற்றும் கைங்கரியத்தில் இவ்வரசு ஈடுபடுகிறது.

கிழக்கு மாகாணத்தில் மேய்ச்சல் தரை விவகாரப் பல பண்ணையாளர்கள் தற்கொலை நிலைக்கு இட்டுச்செல்கின்றது. அத்துடன் பல பரம்பரை பரம்பரையாக செய்து வந்த வயல் நிலங்களில் தொல்பொருள் ஆராய்ச்சி என்னும் செயல்பாட்டை முடுக்கிவிட்டு தமிழர்களின் விவசாய நிலங்களை அபகரிக்கும் செயல்திட்டம் தொல்பொருள் ஆராய்ச்சி என கிழக்கில் உருவான மையம் இப்பொழுது வடக்கிலும் நிலை கொள்ளத் தொடங்கியுள்ளது. அரச மரத்தை பார்த்தால் உடனே இவ்விடத்தில் புத்த பகவான் இருந்திருப்பார் என்ற கண்ணோட்டத்தில் ஆராய்ச்சியை தொடங்குகின்ற செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

உலகத்துக்கே தர்மத்தை போதித்த புத்த பகவான் அவரை தமது முழுமுதல் தெய்வமாக ஏற்று நடக்கும் இவ் இனவாத சிங்களத் தலைமைகள் அவரது தர்மத்தை தூக்கியெறிந்துவிட்டு அதர்மத்தை தமது தோலில் சுமந்துகொண்டு தமிழ் இனத்தின் தொன்மைகளை சிதைக்கும் கைங்கரியங்களில் ஈடுபட்டு வருகின்றது. வடக்கில் வெடுக்குநாறி மலை. கந்தரோடை இந்து கோவில். குருந்தூர் மலை விவகாரம் அதன் தொடர்ச்சியாக நிலாவரை கிணறுப் பகுதியில் அகழ்வாராய்ச்சி என வலை விரிக்கும் இவ் அரசு தமிழ் மக்களுக்கு ஓர் விடயத்தை அழுத்தம் திருத்தமாகக் கூறுகின்றது. தங்களது பேச்சுக்களில் மட்டுமல்ல செயலிலும் நாங்கள் இறங்கியுள்ளோம் என்று. அது என்னவெனில் இது ஒரு பௌத்த நாடு. இங்கு பௌத்த மதம் தான் மதம். இது சிங்களவர்களுக்கு மட்டுமேயுரிய நாடு என வாயால் கூறிவந்த நிலையில் இப்பொழுது அதற்கு செயல் வடிவம் கொடுக்க ஆரம்பமாகியுள்ளது.

அண்மையில் அரசினால் சமர்ப்பிக்கப்பட்ட பாதீட்டில் பௌத்த சாசனத்துக்கு அதிகளவான நிதி ஒதுக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டதொரு விடயம். இவ்வாறு தமிழர்களின் பூர்வீக நிலங்களை அபகரிக்கும் கபட எண்ணத்தோடு தொல்பொருள் ஆய்வு எனக் கூறி செயல்படுவதானது மிகப்பெரும் இனமுறுகலை மேலும் உருவாக்கக்கூடிய சூழ்நிலை காணப்படுகின்றது. இவ்வாறான செயல்பாடுகளின் தொடர் 1983இல் ஏற்பட்ட கொலை வெறி கலவரமாக மாற வாய்ப்புள்ளது. யுத்தம் இடம்பெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தை விட மிகப்பெரும் பயங்கரமான சூழ்நிலையை தமிழ் மக்கள் சந்தித்துக் கொண்டு இருக்கும் நிலையில் எமது பூர்வீக நிலங்களையும் எமது மத கலாச்சார விழுமியங்களையும் அது சார் இடங்களையும் பாதுகாக்க பிரிந்து வெற்றுக்கோசம் போடும் சகல தமிழ்த் தலைமைகளும் மற்றும் புத்திஜீவிகளும் சமய சமூக ஆர்வலர்கள். புலம்பெயர் அமைப்புக்கள். தமிழக ஈழ ஆதரவாளர்கள் முதற்கொண்டு அனைவரும் இதற்கு எதிராக சாத்வீகமான முறையில் அரசுக்கு எதிர்ப்பை வெளியிடுவதுடன் இவ்வாறான நில அபகரிப்புக்கள்சமயஇடங்களைஅழித்தல் போன்ற விடயங்களை தடுத்து நிறுத்த உடன் செயல்பாட்டில் இறங்கவேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

குறிப்பாக வடகிழக்கு மாகாணம் மட்டுமன்றி இலங்கையில் உள்ள இந்து கலாச்சார அமைப்புக்கள் உடனடியாக சமய இடங்கள் அழிப்பின் இருந்து பாதுகாக்க முன்வரவேண்டும். 2019ஆம் ஆண்டு திருக்கேதீஸ்வர வளைவு பிரச்சினைக்கு குரல் கொடுத்த சிவசேனை கட்சி குருந்தூர் மலை விவகாரத்தில் வாய் மூடி இருப்பதானது எமது இனத்தின் மதங்களுக்குள் ஏற்படும் பிரச்சினைகளுக்கு மட்டும் தான் வாய் வீச்சு.

பௌத்த மேலாதிக்க சிந்தனையோடு எமது பூர்வீக நிலங்களை மத தலங்களை அழிக்கும்பொழுது பெட்டிப் பாம்பாக அடங்கியிருப்பது மிகவும் வேடிக்கையான விடயம். அல்லது கையாலாகாத்தனம் என்றே கூறமுடியும். எனவே ஒரு முகப்பட்டு இவ் இனவாத அரசு மேற்கொள்ளும் அடாத்தான நில அபகரிப்பு செயல்பாட்டை தொடக்கத்திலேயே முற்றுப்புள்ளி வைக்க அனைவரும் ஒருமித்து சாத்வீக ரீதியான போராட்டங்களை நடாத்தி எமது பூர்வீக நிலங்களையும் எமது பூர்வீக சமய ஆலயங்களையும் பாதுகாக்க அணிதிரள்வது காலத்தின் கட்டாயமாகும்.

**தமிழ் கிறுக்கன்**



# தமிழ் அரசியல் கட்சிகள் இனி என்ன செய்யப்போகிறார்கள்



இனவாதம், மதவாதம், தேசிய வாதம் இந்த மூன்றுமே இந்த நாட்டின் அரசியலை தீர்மானிக்கிறது. அகிம்சைப் போராட்டம், 30 ஆண்டுகால ஆயுதப்போராட்டம் என்று 1957 தொடக்கம் 2021 வரையிலான ஆட்சி மாற்றங்களை தமிழரசியல் தலைமைகளும் தமிழ் மக்களும் கண்டுவந்ததே வரலாறு. இத்தகைய சூழ்நிலையில் தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டம் என்னும் பொழுது அதனை இறுதிவரை முன்னெடுத்த தமிழீழ விடுதலைப்புலிகள் அவர்களின் ஆயுத போராட்டம் மௌனிக்கப்பட்டதையடுத்து சில்லறை அரசியல் கட்சிகள் எல்லாம் தமிழினத்தைகல்லறைக்கு அனுப்புகின்ற நடவடிக்கைகளையே மேற்கொண்டு வருகிறார்கள். விடுதலைப்புலிகளின் போராட்டத்தை இந்தியா, சீனா, அமெரிக்கா உட்பட 57 நாடுகள் சேர்ந்து அழித்தன என்பது வரலாறு.

ஆயுதப் போராட்டம் ஒருவகையில் முன்னெடுக்கப்பட்டால் அரசியல் போராட்டத்திற்காக தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கி அதனோடு பாராளுமன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை பெற்றுக்கொடுப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் தனது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இருந்தபோதிலும் அரசாங்கத்தினுடைய திட்டம் அல்லது நோக்கம் என்னவென்றால் தமிழீழ விடுதலைப்புலிகளினால் உருவாக்கப்பட்ட எந்தவொரு அமைப்பும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் புத்துயிர் பெறக்கூடாது என்பதே அரசாங்கத்தின் திட்டமாகும். அதனை அவர்கள் சரிவர செய்து வருகிறார்கள்.

குறிப்பாக டட்லி சேனநாயக்க தொடக்கம் கோட்டபாய ராஜபக்ச வரை ஆட்சியாளர்கள் தமிழின அழிப்பினை மேற்கொண்டு வந்தனர். அதனை அவர்கள் வாழையடி வாழையாக செய்து வருகின்றனர். வருடங்கள் பல உருண்டோடிய நிலையிலும் விடுதலைப்புலிகளுடனான போர் முற்றுகைக்கு கொண்டுவரப்பட்ட போதிலும் வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் தமது சுயநிர்ணய உரிமைகளோடு வாழ்வதற்கான வழிகளை அரசாங்கம் இன்னமும் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. கடந்தகால கசப்பான உணர்வுகளை மறந்துவிட்டு அபிவிருத்தியை நோக்கி பயணிப்போம் என்று கூறுகின்ற தமிழ் அரசியல் தலைமைகள். உங்களை அரசாங்கம் எந்த அளவுகோள் கொண்டு அளக்கிறது என்பதைகவனத்தில்கொள்ளவேண்டும். கடந்த காலங்களில் பயங்கரவாதிகள் என்ற அளவுகோள் கொண்டு தமிழ் மக்களையும் ஆயுத போராட்ட கட்சிகளையும் ஒரே கண்ணோட்டத்தில் பார்த்தார்கள். தென்னிலங்கைக்கு ஒரு தமிழ் பேசும் நபர் சென்று வருவதாக இருந்தால் அது பாரிய சிக்கல்களாகவே அமைந்திருந்தன.

குறிப்பாக மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை, அம்பாறை, வவுனியா, மன்னார் போன்ற பிரதேசங்களில் இருந்து கொழும்புக்குச் செல்பவர்கள் 20 இடங்களில் சோதனை சாவடிகள் இருந்தன. இவற்றையும் தாண்டியே ஒருவர் கொழும்பிற்கு செல்ல வேண்டும். அன்றைய காலகட்டத்தில் தமிழின அழிப்பை மேற்கொண்ட இலங்கை அரசாங்கம் தமிழ் அரசியல் தலைமைகளை வைத்தே அதனை சீர்செய்து கொள்வதற்கு இன்று முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதற்கு உடந்தையாக தற்பொழுது யாழ்ப்பாணத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அங்கஜன் இராமநாதன், வன்னியில் திலீபன், காதர் மஸ்தான், கிழக்கில் கருணா, பிள்ளையான், வியாழேந்திரன் இன்னும் பலர். முஸ்லிம் தலைவர்களும் அரசாங்கம் தமிழ் இனத்திற்கு எதிராக எதை செய்தாலும் அதனை சரியென்றே அவர்கள் வாதாடுகின்றார்கள். தற்பொழுது இலங்கையில் ஏற்பட்டிருக்கக்கூடிய நில அபகரிப்பு விடயங்களிலும் ஜனாசா எரிப்பு விடயங்களிலும், மலையகத்தினுடைய 1000 ருபாய் சம்பளப் பிரச்சினையிலும் அரசாங்கம் தனது கடும்போக்கை தமிழ் பேசும் மக்கள் மீது திணித்து வருகின்றது.

வடக்கு தமிழர், கிழக்கு தமிழர், முஸ்லிம்கள், வன்னித் தமிழர், கொழும்புத்தமிழர், மலையகத் தமிழர் என்று நமக்குள் நாமே பிரிவினைகளை ஏற்படுத்திக்கொண்டால் அது அரசாங்கத்திற்கு சாதகமான தன்மையை ஏற்படுத்திக்கொடுக்கும். இதுதான் கடந்த காலங்களிலிருந்து நடந்து வருகிறது. இதனை மாற்றியமைக்க ஏன் இவ் அரசியல் தலைமைகள் தயங்குகின்றனர். அரச கைக்கூலிகளாக செயற்படுவதனூடாக தமிழினத்திற்கு எதனையுமே சாதித்துவிட முடியாது. மாறாக தமது சொகுசு வாழ்க்கையை மாத்திரம் அனுபவிக்க முடியும். விடுதலைப்புலிகளின் கோரிக்கையை அரசாங்கம் நிறைவேற்றித்தராது என்றால் தமிழ் மக்கள் மீது அராஜகம் கட்டவிழ்த்து விடப்படுகின்றபொழுது, தொல்பொருள் ஆராய்ச்சி என்ற பெயரில் நிலங்கள் சுரண்டப்படுகின்ற பொழுது, இவற்றிற்காகஏன்அரசதமிழ்ஒட்டுண்ணி குழுக்கள் குரல் எழுப்பக்கூடாது. தீர்வினை பெற்றுக்கொடுக்க முடியாது?. தொல்பொருள் ஆராய்ச்சி என்ற பெயரில் தற்பொழுது சுரண்டப்பட்ட நிலமாக வெலியோயா (மாவிலாறு) அமையப்பெறுகின்றது. கிழக்கில் மேய்ச்சல் தரை சுரண்டப்பட்டு அங்கு தமிழ் மக்களுடைய மாடுகள் கொல்லப்பட்டிருக்கின்றது. திருகோணமலை வெந்நீர் ஊற்று அபகரிக்கப்பட்டுள்ளது. அதுபோன்று முல்லைத்தீவு செம்மலை நீராவியடி பிள்ளையார் கோவில் மற்றும் குமுழமுனை குறுந்தூர் மலைப்பகுதி, யாழ்ப்பாணம் நீர்வேலி நிலாவரை கிணறு, ஊர்காவற்துறையில் ஒருசில பகுதி போன்ற பிரதேசங்களும் தற்பொழுது அகழ்வாராய்ச்சி என்ற பெயரில் அரசாங்கத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர்கள் கூட தொல்பொருள் திணைக்கள அலுவலர்களின் அனுமதி பெற்றே செல்ல வேண்டும். குறித்த பிரதேசங்களில் இராணுவ பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இவையெல்லாம் அரசாங்கத்தினால் திட்டமிடப்பட்டு தமிழர் பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அநுராதபுரத்தில் அவர்களுடைய பிரதேசங்களில் இந்துக்கோவில்களை கட்டுவதற்கு அல்லது தமிழ் மக்கள் தமது அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுமதி தருவார்களா? அப்படியாக இருந்தால் தமிழ் மக்கள் பிரதேசங்களில் மட்டும் இவர்கள் இப்படி செய்கிறார்கள்? இன்று தமிழ் மக்கள் மத்தியில் பாரிய கேள்வி என்னவென்றால் தமிழ் அரசியல் தலைமைகள் தமிழ் மக்களுக்கு என்ன செய்யப்போகிறார்கள். இந்த சிங்கள பேரினவாத அரசை எதிர்த்து தொடர்ந்தும் இவர்கள் போராடுவார்களா? நில ஆக்கிரமிப்புக்கள் தொடருமாக இருந்தால் தமிழர்பகுதிகளைதக்கவைத்துக்கொள்ள முடியாது போகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தவரையில் 22 ஆசனங்களில் இருந்து தற்பொழுது 10 ஆசனங்களே உள்ளது. அரசாங்கத்தின் அபிவிருத்தியை நம்பி மக்கள் ஏமாற்றப்பட்டு வருகிறார்கள். இதற்கு காரணம் த.தே.கூட்டமைப்பின் மீதிருந்த நம்பிக்கையை மக்கள் இழந்ததேயாகும். த.தே.கூட்டமைப்பு ஆயுதம் ஏந்தி போராடாதுவிட்டாலும் அகிம்சை வழிப்போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய தேவை உள்ளது. இதனை இவர்கள் நிச்சயமாக வருங் காலங்களில் செய்ய வேண்டும் அல்லது செய்வதற்காக இவர்கள் தள்ளப்படுவார்கள்.

குறிப்பாக ஆயுதம் தாங்கி போராடிய ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எப், ஈபிடிபி, ஈரோஸ் போன்ற இயக்கங்கள் தற்பொழுதும் உயிரோட்டத்துடன் இருக்கிறார்கள். விடுதலைப்புலிகளினுடைய போராட்டம் மௌனிக்கப்பட்டதையடுத்து இவர்களே சிங்கள பேரினவாதிகளுக்கு எதிராக தமது போராட்டங்களை ஏன் கட்டவிழ்த்துவிடவில்லை என்ற கேள்வி எழுப்பப்படவேண்டும். விடுதலைப்புலிகள் இருந்த காலகட்டத்தில் இவர்களால் தலைதூக்க முடியவில்லை என்றால் தற்பொழுது அதனை மேற்கொள்வதற்கு இவர்களுக்கு என்ன பிரச்சினை இருக்கிறது? கருணா - பிள்ளையான் போன்றவர்கள் இனியொருபோதும் தமிழினத்திற்காக போராட முடியாது. அவர்கள் அராசாங்கத்தினால் பல்லு கழற்றிய பாம்பைப் போலவே செயற்பட முடியும்.

இந்த நிலையில் முன்னாள் போராளிகள் பலரும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் விதம் தமிழ் மக்களுக்கான தீர்வை பெற்றத்தரும் சமிக்ஞைகளாக அமையப்பெறவில்லை. ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதிலிருந்து தொடர்ந்தும் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டோர், அரசியல் கைதிகள் விடுதலை, காணி பொலிஸ் அதிகாரங்கள் போன்றவற்றுக்குமாக தொடர்ந்தும் அஹிம்சைப் போராட்டங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆனால் இன்றுவரை இதற்கு ஒரு முடிவே இல்லை. அப்படியாக இருக்கின்ற பொழுது அரசாங்க நிகழ்ச்சி நிரலுக்கேற்ப எமது செயற்பாடுகளை தொடர்ந்தும் மேற்கொள்வோமாக இருந்தால் எமது அரசியல் பாதையில் நாம் தொடர்ந்தும் பயணிக்க முடியாது.

10 ஆண்டுகளுக்கு ஒருமுறை அரசியல் ரீதியாக நாடுகளில் மாற்றங்கள் நடைபெறுவது வழக்கம். கொரோனா வைரஸ் என்ற ஒரு கொடிய நோய் தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமல்ல உலகம் முழுவதும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதிலிருந்து மக்கள் மீண்டெழுவதற்கு பொருளாதாரத்தை கட்டியெழுப்பவதற்கு பிரயாசப்பட்டுக்கொண்டிருக்கின்ற இந்த காலகட்டத்தில் விழுந்தவனை ஏறி மாடு மிதிப்பது போன்று இந்த அரசாங்கம் செயற்படும் விதம், தமிழ் மக்கள் மத்தியிலும் தமிழ் அரசியல் தலைமைகள் மத்தியிலும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

ஆகவே த.தே.கூட்டமைப்பானது தமிழ் கட்சிகள் அனைத்தையும் ஒன்றிணைத்து ஒரு குடையின் மீது பயணிக்கின்ற நிலைமைகளை உருவாக்க வேண்டும். அவ்வாறு உருவாக்கினால் மாத்திரமே தமிழ் மக்களுக்கான தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்ற இலக்கை அடைய முடியும். ஆகவே தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்கின்றோம் என்று கூறுகின்ற தமிழ் அரசியல் கட்சி உறுப்பினர்கள், பொது அமைப்புக்கள் இவையனைத்தும் தங்களை மீள் பரிசீலனை செய்துபார்க்கவேண்டும். எமதுகட்சிஅல்லதுஎமதுஅமைப்புஅல்லது நான் தமிழினத்தின் விடுதலைக்காக செய்கின்ற விடயம் இந்த இனத்திற்கு துரோகமானதா? அல்லது சாதகமானதா? என்று. பாதகமான தன்மைகளை ஏற்படுத்தினால் அரசியலில் இருந்து விலகிக்கொண்டு அதனை சரியாக செய்பவர்களுக்கு இடமளித்துவிட்டு ஒதுங்கிக்கொள்ள வேண்டும். இவ்வாறு செய்வதனூடாகவே எமது இலக்கை அடைய முடியும். தொடர்ந்தும் அரசாங்கத்திற்கு முண்டுகொடுக்கின்ற அரச கைக்கூலிகளாக செயற்படுகின்ற காட்டிக்கொடுக்கின்ற தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை மக்கள் அடித்துவிரட்டுகின்ற காலம் மிக தொலைவில் இல்லை என்பதனையும் நாம் இவ்விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். அடக்கு முறைக்கெதிராக உங்களுடைய குரல் ஓங்கி ஒலிக்கவில்லை என்றால் மக்கள் புரட்சியானது இந்த நாட்டில் வெடிக்கும். மக்கள் புரட்சிகளினூடாக நாடுகளில் மக்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்பதை கவனத்தில் கொண்டு தமிழ் அரசியல் தலைமைகள் வருங்கால அரசியலில் செயற்பட வேண்டும் என்பதனை கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

**நெற்றிப்பொறியன்**

# கொரோனா வைரசும் பூகோள அரசியலும்

தற்போதைய காலகட்டத்தில் உலக ளாவிய ரீதியில் அபிவிருத்தியடைந்த நாடுகள், அபிவிருத்தியடையாத நாடுகளை நசுக்குகின்ற அல்லது பொருளாதார ரீதியாக வீழ்ச்சியினை ஏற்படுத்தும் நோக்கில் செயற்படுகின்றன. பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை எந்தவொரு நாட்டிலும் ஆட்சி மாற்றப்படுவது, நாடுகள் பிளவுபடுவது, நாடுகளுடைய வளர்ச்சி, பொருளாதார ரீதியான வீழ்ச்சி, வறுமை போன்ற விடயங்களில் மாற்றம் ஏற்படுவது என்பது வழமை. அது மட்டுமன்றி இராணுவ வளர்ச்சி, அதிகாரம் கொண்ட நாடாக மாற்றமடைவது, அணு ஆயுத உற்பத்தி, சர்வதேச ரீதியிலான அனுவாயுத ஒப்பந்தங்கள் போன்ற விடயங்களும் இதில் உள்ளடக்கப்படுகின்றன. எது எவ்வாறாக இருப்பினும் தமது நாட்டினுடைய வளர்ச்சியையும் தனது இராணுவத்தினுடைய வலிமையையும் பாதுகாத்துக்கொள்ளக்கூடிய வகையில் தற்போதைய அபிவிருத்தியடைந்த நாடுகள் செயற்பட்டு வருகின்றன. இதனொரு கட்டமாக இன்றைய உலகளாவிய ரீதியில் நிலைமைகளை எடுத்துக்கொண்டால் வளர்ச்சிபெற்ற நாடுகள் தமது பொருளாதார உற்பத்தியில் முன்னணியாகத் திகழ்ந்து வீட்டோ அதிகாரம் கொண்ட நாடுகளுக்கிடையில் நிலவுகின்ற போட்டியினை மேலும் விரிவுபடுத்துவதற்கு சர்வதேச ரீதியாக தன்னை முன்னிலைப் படுத்துவதற்கான இரசாயன உற்பத்தி, பொருளாதார அபிவிருத்தி, விண்வெளி ஆய்வுகள், அணுவாயுத உற்பத்திகள் போன்றவற்றில் பலமாக செயற்பட்டு அதி காரம் கொண்ட நாடுகளுக்கிடையில் ஒப்பந்தங்களை மேற்கொள்கின்றன.

இதிலும் குறிப்பாக சர்வாதிகாரியாக எந்த நாடு செயற்படுவது என்பது இவர் களுக்கிடையில் நிலவுகின்ற போட்டியாகும். அதனொரு கட்டமாகவே சர்வாதிகார பலம் பொருந்திய நாடுகள் விளையாட்டாக ஒரு நாடு இன்னொருநாட்டின்மீதுபடையெடுக்கின்றன. ஏதோவொரு பலியை அந்த நாட்டின் மீது திணிப்பதன் ஊடாக குறித்த நாடு வளர்முக நாடாக மாற்றம் பெற்றுவிடக்கூடாது. அவ்வாறாக மாற்றம் பெற்றால் அது சர்வாதிகாரப் பரப்பில் தம்மை மிஞ்சிய நாடாக மாறிவிடும் என்கின்ற காரணத்தினால் குறித்த நாடுகளுக்கிடையில் யுத்தங்களை கட்டவீழ்த்து, பொருளாதாரங்களை சிதைத்து, அதன் அண்டைய நாடுகளில் கிளர்ச்சிகளை பேரினவாத சக்திகளை வளர்த்து, குறித்த நாடுகள் அதிகாரம் கொண்ட நாடுகளிடம் கையேந்தும் அளவுக்கு நிலைமைகளை மோசமாக்கி விடுகின்றன.


அதன் பின்னர் கடன் சுமையுடன் கூடியதாக குறித்த வளர்முக நாடுகள் மாற்றம் பெற்றுவிடும். குறித்த நாடுகளில் வீதி அபிவிருத்திகள், பாலக் கட்டுமானங்கள், பொருளாதார மத்திய நிலையங்கள், விவசாய அபிவிருத்திகள், உல்லாசத்துறை என்கிற துறைகளை மேம்படுத்துகின்றோம் என பணத்தை அள்ளி வழங்கி அந்த நாடுகள் கடனிலிருந்து மீள முடியாத அளவிற்கு நிலைமைகளைக் கொண்டு வருகின்றனர். அதன் பின்னர் குறித்த நாடுகள் அதிகார நாடுகளுக்கு அடிமைகளாக மாறிவிடும் நிலைமை ஏற்படுகிறது.

அதுபோன்று இன்றைய சூழ்நிலையில் இலங்கையரசு பூகோள அரசியலுக்குள்ளும் கொரோனா கொத்தணிக்குள்ளும் சிக்குண்டுள்ளது. கொரோனா வைரசின் தாக்கம் ஒருபுறம் இருந்தாலும் இந்த நாட்டினுடைய அரசியல் ஸ்திரம் என்பது, இந்த நாட்டினுடைய யுத்த வடுக்குள் என்பது அதனது அரசியல் பின்புலம் என்பது இன்னமும் தீர்க்கப்படாத பிரச்சினையாகவே இருக்கிறது. பேச்சுவார்த்தை என்கிற போர்வையில் நோர்வே அரசானது தமிழினத்தின் போராட்டத்தை சிதைத்ததுடன் அந்த ஆயுத இயக்கத்தின் தலைவரையும் இயங்கவிடாமல் செய்தது. தமிழர்கள் இலங்கை மீது அக்கறைகொண்ட நாடுகள் என்ன செய்திருக்கவேண்டும். 30 ஆண்டுகள் இடம்பெற்ற யுத்தம் முடிவடைந்து 10 ஆண்டுகளுக்குள் ஏதாவதொரு தீர்வினை வழங்கியிருக்க வேண்டும். எந்தத் தீர்வுமே வழங்கப்படாத நிலையில் அனைத்தும் கேள்விக்குறியாகவே இருக்கின்றது. இந்த நாட்டில் சமாதானத்திற்கு சகுனிகளாக விடுதலைப்புலிகள் இருக்கிறார்கள் என அரசு பறைசாற்றியது. சர்வதேச ரீதியாக விடுதலைப்புலிகளை தடைசெய்தது. ஒரு இனத்தின் விடுதலைக்காக போராடிய மக்களையும், விடுதலைப்புலிகளையும் பயங்கரவாதிகள் என்கிற வரையறைக்குள் உட்படுத்தி போரை முடிவுக்குக் கொண்டுவந்தது மட்டுமல்லாது ஆசியப் பிராந்தியத்தின் சார்க் அமைப்பு நாடுகளின் தொடர்பினைத் துண்டித்து விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் என முத்திரை குத்தினார்கள். ஆனால் திம்பு முதல் டோக்கியோ வரையிலான பேச்சுவார்த்தைகளை எடுத்துக்கொண்டால் உள்ளூர் - சர்வதேசம் என பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டதுடன் அது வெற்றிகரமாக முடிவடையவில்லை, வெறுமனே காலங்கள் மாத்திரம் இழுத்தடிக்கப்பட்டது.

அதன் பின்னர் இலங்கையைப் பொறுத்தவரை ஒரு இனப்படுகொலை இடம்பெற்றது என்கின்ற நிலைப்பாடு இருந்தபோதிலும் இலங்கையரசாங்கத்திற்கு அப்போது இரண்டு வருட கால அவகாசம் வழங்கியதன் ஊடாக இலங்கையரசு தன்னை மேலும் பலப்படுத்திக்கொண்டது. இதற்கும் பூகோள அரசியலே காரணம். அமெரிக்காவைப் பொறுத்தவரையில் தனது சர்வாதிகாரத்தை உலகத்தில் இருக்கும் அனைத்து நாடுகளுக்குள்ளும் திணித்துள்ளனர். குறித்த நாடுகள் யுத்தமின்றி ஒரு அபிவிருத்தியினை நோக்கிச் செல்கின்றபோது அதனை சிதைக்கின்ற நோக்கில் அமெரிக்கா செயற்பட்டு வந்த விதம் ஆச்சரியமூட்டுவது மட்டுமல்லாது தன்னுடைய பொருளாதாரம், தன்னுடைய வளர்ச்சி சிதைக்கப்படுகின்ற போது எவ்வாறெல்லாம் குறித்த நாடுகளை தனது கைப்பொம்மைகளாகப் பயன்படுத்தி தனது சர்வாதிகாரத்தை நிலைநாட்டி போராட்டத்தை அழிவுப்பாதைக்குள் கொண்டு சென்றது.

இதனைப் புரிந்துகொள்ளாத தமிழ்த் தரப்புக்கள் சர்வதேசம் பார்த்துக்கொள்ளும், சர்வதேச நீதி கிட்டும் என்று சொல்வது தவறு. ஆனாலும் இனப்படுகொலை என்கிற விடயத்தில் இந்தியா, அமெரிக்கா, சீனாவை மீறி எந்தவொரு நாடும் அதற்கானதொரு நீதியினைப் பெற்றுத்தருவதற்கான வாய்ப்புக்களும் இல்லை. இன்று சர்வதேச ரீதியாக ஏதோவொரு வகையில் பலம் பொருந்திய நாடுகளாக இவை திகழ்கின்றன. இவர்களை மீறி மாற்றுக்கருத்து, மாற்றுச்சிந்தனை கொண்டவர்களை இல்லாதொழிக்கும் அரசியலையேகுறித்தநாடுகள் செய்துவந்தன, தற்போதும் செய்துகொண்டிருக்கின்றன.

தமிழீழ விடுதலைப்புலிகளுடைய போராட்டம் என்பது சர்வதேச ரீதியாக இணைத்துக்கொள்ளப்பட்டதொன்று. ஆனால் அதனை விடுதலைப்புலிகள் சரியாகக் கையாளவில்லை என்கிற குற்றச்சாட்டும் எழுந்திருக்கிறது. அனைவருடைய எதிர்பார்ப்புக்களும் விடுதலைப்புலிகளுடைய போராட்டம் மௌனிக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வுத்திட்டத்தை வழங்குவார்கள் என்பதேயாகும். அவ்வாறு இவர்கள் வழங்கியிருந்தால் இந்த நாடு சுமுகமானதொரு நிலைமையை அடைந்திருக்கும்.



ஆகவே ஆசியப் பிராந்தியத்தில் இலங்கையினது திருகோணமலை, அம்பாந்தோட்டை, கொழும்பு போன்ற துறைமுகங்கள் முக்கியத்துவம் பெறுகிறது. ஆசியப் பிராந்தியத்தில் உலகப்போர் ஏற்படுகின்ற பட்சத்தில் திருகோணமலை துறைமுகம் பல போர்க்கப்பல்களை ஒரேநேரத்தில் நிறுத்தி பாதுகாப்பாகப் போர் செய்யக்கூடிய தன்மையைக் கொண்டிருக்கிறது. ஆகவே இந்த துறை முகமானது இரண்டாம் உலக மகா யுத்தத்தில் பயன்படுத்தப்பட்டது. இவர்களின் உடல்கள் கூட திருகோணமலையில் இன்னமும் சமாதிகளாக இருக்கிறது.

ஆகவே உலக அரங்கில் இந்த பூகோள அரசியலானது ஒரு சர்வதேச அழிவைநோக்கி சென்றுகொண்டிருக்கிறது. இதில் எமது நாட்டை நாம் வலுப்படுத்தி முன்னேற்றகரமான பாதையில் கொண்டு செல்லவேண்டுமாகவிருந்தால் விவசாயத்துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். அப்போதுதான் எமது நாட்டை தன்னம்பிக்கைக்குரிய நாடாக வளம் பொருந்திய நாடாக மாற்ற முடியும். ஆசியப் பிராந்தியத்தில் இலங்கையானது மேட்டு நிலமாக திகழ்கின்றது. அனைத்து காலங்களுக்கும் ஏற்ற வகை யில் உரிய பயிர்ச்செய்கைகளையும் இங்கு மேற்கொள்ள முடியும். 24 மணி நேரமும் குளிர்கொண்ட பிரதேசங்களும் இங்கு இருக்கிறது. ஆகவே இலங்கையை இராஜதந்திர ரீதியில் சர்வதேச நாடுகள் கையாள்வது என்பதும், இந்த நாட்டை ஒரு கடன் சுமையில் விட்டுச்சென்றிருப்பது என்பதும்அந்தநெருக்கடிக்குள்இலங்கையரசு இருந்தாலும் மறுபுறத்தில் தனது இனவாத ஆட்சியை செய்வது என்பதுதான் இன்றைய துர்ப்பாக்கிய நிலை.

விடுதலைப் புலிகளின் காலத்தில் இலங்கை அரசி யலில் மாற்றங்கள் நிகழ்ந்தபோது அதனைக் கையாள்கின்ற தன்மையை நாசுக்காக மேற்கொண்டிருக்கவேண்டும். அதில்தவறிழைக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே மாற்றத்திற்கான ஒரு வழியை நோக்கி சர்வதேசம் நகர்ந்துகொண்டிருக்கின்றபோது இலங்கைத் தமிழரின் இனப்பிரச்சினைக்கு இலங்கையரசு தீர்வு வழங்கும் என்று நாம் ஒருபோதும் நம்பிக்கை கொள்ள முடியாது. யுத்தம் முடிவடைந்து பத்து ஆண்டுகளில் தீர்வு வழங்காத சர்வதேசம், யுத்தம் நடந்துகொண்டிருந்தபோது முள்ளி வாய்க்காலில் அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டபோது திரும்பிப்பார்க்காத சர்வதேசம், இனியும் திரும்பிப்பார்க்கும் என்று நம்புவதில் பயனில்லை. முடிந்த முடிவாக தமிழ்க்கட்சிகள் இன்னமும் சர்வதேசத்தை நம்பியிருப்பது என்பது ஒரு பயனற்ற தன்மையையே வெளிப்படுத்தி நிற்கிறது. பூகோள ரீதியிலான கட்டமைப்புக்களை விடுதலைப்புலிகள் போன்று உருவாக்கி அதனை மீண்டும் நாம் முன்னெடுப்போமாகவிருந்தால் சர்வதேச ரீதியாக இந்தியாவிற்கு ஒரு நெருக்கடியை கொடுப்பதன் ஊடாகவும், இந்தியா - சீனா பிரச்சினைகளை முன்னெடுப்பதனாலும் இந்தியா - பாகிஸ்தான் பிரச்சினைகளை முன்னெடுப்பதனாலும் அதனை மாற்றுவழிகளில் அணுகுவதன் ஊடாக எமக்கான தீர்வினை நாம் பெற்றுக்கொள்ள முடியும் அல்லாதுபோனால் அடுத்து வருகின்ற தலைமுறையினரும் இந்தப் போராட்டத்தின் பால் ஈர்க்கப்படுவார்கள். அது தவிர்க்க முடியாத ஒன்றாக அமையும். சிறந்த தலைவர்கள் உருவாக்கப்படுவதில்லை அவர்கள் உருவாகிறார்கள் என்பதுதான் உண்மை.

சர்வதேச ரீதியில் அமெரிக்காவினுடைய நிலைப்பாடு என்பது எந்தக் காலகட்டத்திலும் ஒரு இணக்கப்பாட்டு அரசியலை கொண்டிருக்கவில்லை. யுத்தம் அல்லது அந்த நாட்டில் இனவெறித் தாண்டவம் தான். இதன் ஊடாக ஆயுத ரீதியிலான வியாபாரத்தை அவர்கள் பெருக்கியதுடன் சர்வதேச சந்தையிலும் தன்னை வளப்படுத்திக்கொண்டனர். அமெரிக்காவின் இரட்டைக் கோபுரத் தாக்குதலின் பின்னர் தான் உலகின் போராட்ட அல்லது பயங்கரவாத அமைப்புக்களை அமெரிக்கா தடை செய்தது.

இலங்கையைப் பொறுத்தவரை அதன் பூகோள பாதுகாப்பாக விடுதலைப்புலிகள் இருந்தார்கள். ஆகவே விடுதலைப்புலிகளை இந்நாட்டிலிருந்து அழித்ததன் ஊடாக உலக அரங்கில் சுதந்திரமாக நாடுகள் செயற்பட முடியும் என்ற நோக்கில் இவ்வமைப்பின் ஆயுதப்போராட்டம்திட்டமிட்டுஅழிக்கப்பட்டது. ஆனால் சர்வதேச ரீதியாக நாடு கடந்த தமி ழீழ அரசு விடுதலைப் புலிகளின் சார்பில் இயங்கிக்கொண்டிருக்கிறது. அமெரிக்காவின் நியூயோர்க்கில் உருத்திரகுமாரன் தலைமையில் இவ்வமைப்பு செயற்படுகிறது. அதன் காரணம் ஏதோவொரு கட்டத்தில் தமக்கு எதிராக இலங்கை - இந்திய அரசுகள் செயற்படுகின்றபோது நாடு கடந்த தமிழீழ அரசினைப் பயன்படுத்துகின்ற ஒரு திட்டமேயாகும். ஆகவே பூகோள நிலைமைகளை இலங்கையரசு கருத்திற்கொண்டு எமது நாட்டை நாமே பாதுகாத்துக்கொள்கின்ற ஒரு கட்டமைப்பை உருவாக்குவதற்கு இன மத மொழி பேதங்களை கையில் எடுக்காது, சிறுபான்மை இனங்களையும் இணைத்துக்கொண்டு பயணிப்பதன் ஊடாகவே இந்த பூகோள அரசுகளின் அடிமைத்தனத்திலிருந்து எமது நாட்டை பாதுகாத்துக் கட்டியெழுப்ப முடியும். இல்லையேல் பெரும் கடன் சுமையில் இந்த நாடு தொடர்ந்தும் இன்னொரு நாட்டின் கீழ் தான் வாழ முடியும்.

**மறவன்**

# வடகிழக்கில் தொல்பொருள் ஆராய்ச்சி என்கிற பெயரில் நில அபகரிப்பு – தமிழ்ப் பிரதிநிதிகள் நித்திரை

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்



தற்பொழுதுவடகிழக்குபகுதிகளிலே மூன்று, நான்கு விதமாக காணி அபகரிப்புக்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. அதிலே ஒன்றை நாம் பார்க்கும் பொழுது தொல்பொருள் அகழ்வு ஆராய்ச்சி என்ற போர்வையிலே பல இடங்களிலே அகழ்வாராய்ச்சி செய்யப்பட்டு பௌத்த விகாரைகள் அமைக்கப்படுகின்ற அல்லது பௌத்த சின்னங்கள் அமைக்கின்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். அதில் குறிப்பாக வடக்கு கிழக்குப் பகுதிகளில் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது குறிப்பிடத்தக்கது. அது முல்லைத்தீவாக இருக்கலாம் மட்டக்களப்பாக இருக்கலாம் அம்பாறையாக இருக்கலாம் திருகோணமலையாக இருக்கலாம். இதில் ஒன்று நாம் பார்க்க வேண்டிய விடயமாக இருக்கின்றது. என்னவென்றால் உண்மையிலேயே தமிழர்கள் பௌத்த மதத்தை தழுவிய வரலாறு இருக்கின்றது. ஆகவே பௌத்தமதம் என்பது தனியே சிங்கள மக்களுக்கான மதமாக காட்டப்பட்டு ஒரு சிங்கள பேரினவாத சின்னமாக பௌத்த பகவானை சித்தரித்து அதை சிலைகளாக வடித்து அங்கு ஆட்சி செய்யும் சின்னங்களாக மாற்றப்படுகின்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

உண்மையிலே தொல்பொருள் ஆராய்ச்சியில் ஈடுபடுகின்றவர்களை நாம் பார்க்கும் பொழுது அங்கு சிறுபான்மையினர் ஒதுக்கப்படுகின்றனர். சிறுபான்மையினர் அங்கு இல்லாமல் இவ்வாறானதொரு நடவடிக்கை எடுக்கப்பட்டு பௌத்த மயமாக்கல் நடவடிக்கைகளை மேற்கொள்வதை தற்பொழுது வடக்கு கிழக்கு பகுதிகளிலே காணக்கூடியதாக உள்ளது. அதைவிட தற்பொழுது மட்டக்களப்பு மாவட்டத்தில் மேய்ச்சல் தரை பிரச்சினையில் அரச காணிகளாக ஏற்கனவே இருந்த காணிகளை கடந்த யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் எவருக்குமே தெரியாமல் மகாவலி அதிகார சபையும் அதைவிட வனவிலகா திணைக்களமும் அந்த காணிகளை தங்களுக்குரிய காணிகளாக எல்லைகளை போட்டு தற்பொழுது பெரும்பான்மை சிங்கள மக்களை சோளம் செய்கைக்காகவும் முந்திரி செய்கைக்காகவும் என்று கூறி காடுகள் அழிப்புக்களும், காணி அபகரிப்பில் மட்டக்களப்பு தொடக்கம் அனைத்து இடங்களிலும் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் அளவிலான நிலங்கள் தற்பொழுது அபகரிக்கப்பட்டுக் கொண்டு இருக்கிறது. இதுவொரு பாரதூரமான பொருளாதார இன்னல்களுக்கு காரணமாக இருக்கின்றது.

அதுமட்டுமல்லாமல் இது திட்டமிட்ட ஒரு குடியேற்ற கிராமங்களாக மாறக்கூடிய ஒரு அபாயமும் தற்பொழுது இருக்கிறது. இதிலிருக்கும் வேடிக்கை என்னவென்றால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தமட்டில் தொடர்ச்சியாக இந்த காணி அபகரிப்பிற்காக குரல் கொடுப்பது - தடுப்பது - போராட்டம் செய்வது போன்றவற்றை நாம் செய்து கொண்டிருக்கின்றோம். ஆனால் தற்பொழுது வடகிழக்கில் இருக்கக்கூடிய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களாக ஐந்து பேர் இருக்கின்றார்கள். வடமாகாணத்தில் மூன்று பேர் இருக்கிறார்கள். கிழக்கு மாகாணமான மட்டக்களப்பை பொறுத்தமட்டில் இரண்டு பேர் இருக்கிறார்கள். இவர்களுக்கு வாக்களித்த மக்களும் ஏற்கனவே தமிழ் தேசியத்திற்காக வாக்களித்தவர்கள். ஆகவே மக்கள் வாக்களித்ததன் நோக்கம் என்னவென்றால் அவர்களுக்காக வாக்களித்திருக்கிறார்களே தவிர அபகரிப்பிற்காக வாக்களிக்கவில்லை.

ஆகவே இந்த நில அபகரிப்பை தடுக்கின்ற பொழுது இவர்கள் மௌனம் சாதிப்பதும், தடை செய்யாமல் இருப்பதையும் பார்க்கின்ற பொழுது இவர்கள் வெளிப்படையாக கூற வேண்டும். எங்களால் முடியாது நாங்கள் அரசாங்கத்திற்கு சோரம் போய்விட்டோம். எங்களால் இதைத் தடுக்க முடியாது போன்ற விடயங்களை அவர்கள் பகிரங்கப்படுத்தி மக்களுக்கு தெளிவுபடுத்தவேண்டிய தேவை இருக்கிறது. அதற்கப்பால் நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியாக தடுப்பதற்கான நடவடிக்கைகள் – பேச்சுவார்த்தைகள் அதனூடாக போராட்டங்கள் என்ற பல விடயங்களை செய்துகொண்டும் இருக்கின்றோம். இதை தடுப்பதற்கான முயற்சிகளை நாங்கள் மேற்கொள்ள இருக்கின்றோம்.

திட்டமிட்டு செய்யும் அரசாங்கத்தின் நோக்கம் என்னவென்றால் நில அபகரிப்பின் மூலம் சிறுபான்மையின மக்களின் இனவீதாசாரத்தை குறைத்து பெரும்பான்மை மக்களின் இனவீதாசாரத்தை கூட்டுகின்றபொழுது இங்கே உங்களுக்கு தெரியும ஏற்கனவே வெலியோயா திருகோணமலை மாவட்டத்திலே இருக்கக்கூடிய அந்த இடங்கள் திண்டாடப்பட்டு இடையில் இருக்கக்கூடிய குடியேற்றங்களில் சிங்கள மக்கள் வந்து திட்டாடப்பட்டிருக்கின்றது. அதுபோன்றதொரு நிலையும் மட்டக்களப்பு, முல்லைத்தீவு போன்ற இடங்களிலும் இனப்பரம்பல் வருகின்ற பொழுது காலப்போக்கில் ஐந்து பத்து இருபது வருடங்கள் போகின்ற பொழுது தமிழரின் அல்லது தமிழ் பேசும் மக்களின் இனவிகிதாசாரம் குறைக்ககப்பட்டு பெரும்பான்மையினர் மக்கள் பிரதிநிதிகளாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களாக அல்லது பிரதேசசபை உறுப்பினர்களாக வரக்கூடிய வாய்ப்புக்களை தோற்றுவித்ததற்கான பாம்பு நடவடிக்கை என்று தான் நாங்கள் இதை பார்க்கின்றோம். இதை அவர்கள் நிச்சயமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கின்ற நிலத்தை கொடுக்க வேண்டுமாக இருந்தால் மட்டக்களப்பு மக்களுக்கு சோளம் செய்வதற்காகவோ அல்லது முந்திரி செய்வதற்காகவோ கொடுக்கலாம். ஆனால் அவ்வாறில்லாமல் அம்பாறையில் இருந்து ஏன் மட்டக்களப்பிற்கு வரவேண்டும் என்றால் இதுதான், இன ரீதியாக எங்களை அவர்கள் பிரித்து பெரும்பான்மையினத்தை ஊக்குவிக்கின்றார்கள் என்றால் அவர்களை குடியேற்றுவதற்கான ஒரு நடவடிக்கை தான் இது இதில் எந்தவொரு மாற்றுக்கருத்துமில்லை. கரையோர சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டதற்குஎன்ன காரணம் என்றால் ஏற்கனவே மீனவர்கள் மீன் பிடிக்கும் தொழிலுக்காக தான் வந்தார்கள். அப்பொழுது இன ரீதியிலான முரண்பாடு ஆரம்பத்தில் இருக்கவில்லை. ஏதொவொரு நலனுக்காக மக்கள் அதை செய்திருந்தார்கள். அதே நேரத்தில் அவர்கள் இங்கு சிறுபான்மையினராக இருந்தாலும் மட்டக்களப்பிலே முஸ்லிம் மகாவித்தியாலயம் இருந்தது. அதனை நாம் மறுப்பதற்கில்லை. ஆனால் அவ்வாறானதொரு இன முரண்பாடற்ற ஒரு சூழல் இருந்ததன் காரணமாக அதனை ஆக்கிரமிப்பு என்று கூற முடியாது. அவர்களின் தொழிலுக்காக வந்தார்கள், அதை செய்தார்கள். ஆனால் தற்பொழுது அந்த நிலவரம் அல்ல. தற்பொழுதிருக்கும் விடயம் என்னவென்றால் அவர்கள் வேலை வாய்ப்பிற்காக வந்து செய்வது அது வேறு விடயம். இது நிலத்தை அழித்து பிடித்து வந்திருப்பது என்பது ஒரு திட்டமிட்ட நில அபகரிப்பு விடயமாகத்தான் இதைப்பார்க்க வேண்டி இருக்கின்றது.

ஏற்கனவே நல்லாட்சி அரசாங்கம் என்று வாயளவில் கூறினாலும் கூட அதில் சில விடயங்களை எங்களுக்கு செய்யவில்லை என்பதனை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால் இவ்வாறான மேய்ச்சல் தரை விவகாரம், மாவீரர் தின நினைவு கூறல் போன்ற விடயங்களை நல்லாட்சி அரசாங்கம் சில விடயங்களை விட்டுக்கொடுத்து வந்திருக்கிறது. மேய்ச்சல் தரை விடயமாக 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்த அரசாங்க அதிபர் சாள்ஸ் அவர்களும் தற்பொழுது வடமாகாண ஆளுநராக இருக்கக்கூடியவர் எங்களுடைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கக்கூடிய பாராளுமன்ற உறுப்பினர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் பல விடயங்களை முன்னெடுத்திருந்தார்கள். ஆனால் அவ்வாறு இருந்தும் அந்த மேய்ச்சல் தரை தொடர்ச்சியாக இருந்துகொண்டு வந்தது. தற்பொழுது நிறைவேற்று அரசாங்கம் ஆட்சி அதிகாரத்திற்கு வந்ததன் பிற்பாடு தான் எங்களுக்கு மிகவும் பெரிய பிரச்சினையாக இருக்கின்றது.

தமிழ்மக்களுக்கான இலக்கு என்பது அது தொடர்ச்சியாக பேச்சுவார்த்தை செய்வது, அதை விட்டுவிலகுவது, தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வை கொடுக்கவேண்டும் என்று வரும் பொழுது அதை கை கழுவி வேறு ஒரு கோணத்தில் திருப்பிச் செய்கின்றது. அது எல்லா அரசாங்கத்திற்கும் இருக்கின்ற விடயம். ஏற்கனவே நல்லாட்சி அரசாங்கத்தில் கூட அதற்காக பாராளுமன்றத்தைக் கூட கலைத்தது. மைத்திரிபால சிறிசேன அவர்கள் ஜனாதிபதியாக இருந்த காலகட்டத்தில் அவர் மேற்கொண்ட விடயமாக அதை பார்க்கக்கூடியதாக இருந்தது.

தற்பொழுது 77வது சுதந்திரதினம் அண்மித்துக் கொண்டிருக்கின்றது. இந்த 77 வருடங்களில் நாங்கள் பல போராட்டங்களை செய்து இன்னும் தீர்வு என்பது இல்லாமல் தான் இருக்கிறோம். இருந்தாலும் கூட தற்பொழுது இருக்கின்ற விடயம் என்னவென்றால் ஏற்கனவே தேசியத்திற்குள் இருந்த, நாட்டிற்குள் இருந்த, பிராந்தியத்திற்குள் இருந்த தமிழ்த் தேசியப் பிரச்சினை என்பது சர்வதேச பிரச்சினையாக மாற்றப்பட்டிருக்கின்றது. ஆகவே சர்வதேச பிரச்சினையாக மாற்றப்பட்ட இந்த விடயமானது நிச்சயமாக ஒரு நாளில் தீர்வு கிடைக்கும். அது எப்பொழுது என்று சொல்ல முடியாது. அது கிடைப்பதற்கான முயற்சிகள் பல கோணங்களில் செய்யப்பட்டுக் கொண்டு வருகின்றது. ஆகவே வடகிழக்கில் இருக்கக்கூடிய தமிழ் மக்களை பொறுத்தமட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு பின்னால் இருந்து எங்களுடைய பலத்தை காட்டுகின்றபொழுது தான் எதிர்காலத்தில் நாங்கள் எல்லாவற்றையும் வென்றெடுக்க முடியுமே தவிர, அரசாங்க கட்சியின் பக்கம் போவோமாக இருந்தால் இன்னும் இருப்பதும் இல்லாமல் போகின்ற ஆபத்து இருக்கின்றது என்பது தான் உண்மை.

பிள்ளையான அண்மையில் யாழ்ப்பாணி, மட்டக்களப்பு என்று கூறிய விடயமானது அது வழமையாக அவர்களின் வாய்பாடாக இருக்கின்றது. 2004ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகளின் இயக்கத்திற்கு அதிலிருந்து ஒரு பிளவு ஏற்பட்டதன் பிற்பாடு அது தொடர்ச்சியாக இருக்கின்றது. அவர்கள் அப்படித்தான் கதைத்துக் கொண்டிருப்பார்கள். மக்கள் அதை பெரிதாக எடுப்பதில்லை. ஆகவே அதைப்பற்றி நாங்கள் பெரிதாக அலட்டவேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்தார்.




## பாலா படத்தில் வில்லனாக நடிக்கும் அதர்வா?

தமிழ் சினிமாவில் முன்னணி இயக்குனராக வலம்வரும் பாலா, அடுத்ததாக இயக்கும் படத்தில் நடிகர் அதர்வா வில்லனாக நடிக்க உள்ளதாக கூறப்படுகிறது.

விக்ரம் நடிப்பில் கடந்த 1999-ம் ஆண்டு வெளியான சேது படம் மூலம் தமிழ் சினிமாவில் இயக்குனராக அறிமுகமானவர் பாலா. முதல் படத்திலேயே முத்திரை பதித்த இவர், அடுத்தடுத்து இயக்கிய நந்தா, பிதாமகன், நான் கடவுள், அவன் இவன், பரதேசி போன்ற படங்கள் வசூல் ரீதியாகவும், விமர்சன ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்றன. விருதுகளையும் வாரிக்குவித்தன. குறிப்பாக நான் கடவுள் படத்திற்காக பாலாவுக்கு சிறந்த இயக்குனருக்கான தேசிய விருதும் கிடைத்தது.

இதனிடையே பாலா இயக்கும் அடுத்த படத்தில் ஜிவி பிரகாஷ் ஹீரோவாக நடிக்க உள்ளதாகவும், இப்படத்திற்கு ஏ.ஆர்.ரகுமான் இசையமைக்க உள்ளதாகவும் சில மாதங்களுக்கு முன் செய்திகள் வெளியானது.

இந்நிலையில், அப்படத்தில் நடிகர் அதர்வா வில்லனாக நடிக்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இப்படம் குறித்த அறிவிப்பு விரைவில் வெளியாகக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. நடிகர் அதர்வா ஏற்கனவே பாலா இயக்கிய பரதேசி படத்தில் நாயகனாக நடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



## பட்டு புடவையில் ஜொலிக்கும் நடிகை நயன்தாரா

ஹரி இயக்கத்தில் வெளியான ஐயா திரைப்படத்தின் மூலம் நடிகையாக அறிமுகமாகி தற்போது தமிழ் திரையுலகில் லேடி சூப்பர் ஸ்டாராக வளம் வருபவர் நடிகை நயன்தாரா.

இவர் நடிப்பில் தற்போது நெற்றிக்கண் திரைப்படம் கூடிய விரைவில் வெளியாக காத்து இருக்கிறது. மேலும் அண்ணாத்த, காத்துவாக்குல ரெண்டு காதல் உள்ளிட்ட திரைப்படம் படமாக்கட்பட்டு வருகிறது.

படங்களில் மட்டுமல்லாமல் விளம்பர படங்களிலும் தொடர்ந்து நடித்து வருகிறார் நடிகை நயன்தாரா. ஆம் கடைசியாக இவர் நடிப்பில் செருப்பு விளம்பரம் வெளியானது.

இந்நிலையில் மீண்டும் ஒரு நகைக்கடை விளம்பரத்திற்கு நடித்துள்ளாராம். அந்த படப்பிடிப்பின் போது பட்டு புடவையில் நடிகை நயன்தாராவை எடுத்த கண்ணை கொள்ளைகொள்ளும் அழகிய புகைப்படங்கள் வெளியாகியுள்ளது.







## மோஷன் கேப்சர் முறையில் உருவாகும் பிரபாஸ் படம்



தமிழ், தெலுங்கு மொழிகளில் நடித்து பிரபல நடிகராக இருக்கும் பிரபாஸ், அடுத்ததாக நடிக்கும் திரைப்படம் மோஷன் கேப்சர் முறையில் உருவாக இருக்கிறது.

ரஜினி நடிப்பில் வெளியான திரைப்படம் கோச்சடையான். இப்படம் மோஷன் கேப்சர் முறையில் உருவாக்கப்பட்டது. தற்போது மற்றொரு பிரமாண்ட படம் மோஷன் கேப்சர் முறையில் படமாகிறது. இதில் பிரபாஸ் நாயகனாக நடிக்கிறார். இப்படத்திற்கு ஆதி புருஷ் என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

ராமாயணத்தை மையமாக வைத்து புராணக் கதை வடிவில் உருவாகிறது. இதில் ராமராக பிரபாஸ் நடிக்கிறார். ராவணனாக இந்தி நடிகர் சயீப் அலிகான் நடிக்கிறார்.

இப்படத்தின் படப்பிடிப்பு மோஷன் கேப்சர் முறையில் தொடங்குவதற்கான பணிகள் ஸ்டுயோவில் தொடங்கி இருப்பதாக பிரபாஸ் தெரிவித்திருக்கிறார். இப்படத்தில் பிரபாஸ் குறைந்த நாட்கள் மட்டுமே நடிக்க உள்ளார். படத்தின் பெரும்பகுதி மோஷன் கேப்சர் முறையில் உருவாகிறது. பிப்ரவரி 2ம் திகதி இதன் உத்தேச படப் பூஜை நடக்க உள்ளது.

ஓம் ரவுத் இயக்கும் இப்படத்தை பிரசாந்த் பூஷண், பிரசாட் சுதர், ராஜேஷ் நாயர், ஓம் ரவுத் இணைந்து தயாரிக்கின்றனர்.

## நடிகை த்ரிஷாவுடன் இரவு பார்ட்டியில் நடிகர் தனுஷ்




தமிழ் திரையுலகில் துள்ளுவதோ இளமை படத்தின் மூலம் கதாநாயகனாக அறிமுகமானவர் நடிகர் தனுஷ்.

இவரின் நடிப்பில் தற்போது பல திரைப்படங்கள் உருவாகி வருகிறது. அதில் கூடிய விரைவில் ஜகமே தந்திரம் திரைப்படம் வெளியாக இருக்கிறது.

நடிகர் தனுஷ் தனது நெருங்கி திரையுலக வட்டாரங்களுடன் அவ்வப்போது பார்ட்டியில் கலந்து கொள்வதை பார்த்திருப்போம்.

இந்நிலையில் தனது சக நடிகை த்ரிஷாவுடன் இரவு பார்ட்டியில் நடிகர் தனுஷ் நெருக்கமாக இருக்கும் புகைப்படம் வெளியாகி, ரசிகர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.




# முகத்தை அழகாக்கும் சில எளிய இயற்கை அழகு குறிப்புகள்...!!

தக்காளியை மிக்சியில் போட்டு அதனை ஜூஸாக்கி அதை முகத்தில் தேய்த்து சிறிது நேரம் கழித்து குளிர்ந்த நீரில் கடலைமாவு போட்டு கழுவினால் முக பளபளப்பு அடையும்.



நன்கு கனிந்து பழுத்த நிலையில் இருக்கும் வாழை பழத்தை கூழாக்கி அதை முகத்தில் தேய்த்து ,அரை மணி நேரம் கழித்து முகம் கழுவினால் முக பளபளப்பு கூடும்.

பாதாம் பருப்பை அரைத்து தேன், எலுமிச்சை சாறு கலந்து முகத்தில் தடவி சிறிது நேரம் கழித்து கழுவிவர முகம் பளப்பளப்பாகும். உருளைக்கிழங்கு சாறுடன் கடலைமாவையும் சேர்த்து முகத்தில் தேய்த்து வந்தாலும் முகம் பொலிவு பெறும்.

கஸ்தூரி மஞ்சள் தூளை பன்னீரில் கலந்து வெயிலில் வைத்து சூடாக்கி, அதை முகத்தில் தேய்த்து வந்தால் முகப்பருக்கள் மாயமாகிவிடும். செம்பருத்தி இலை, பயத்தம் பயறு இவற்றை சம அளவாக எடுத்து நீர்விட்டு அரைத்து முகத்தில் பூசிவந்தால் முகம் பளபளக்கும்.

அகத்திக் கீரையை தேங்காய் பால் விட்டு அரைத்து முகம் மற்றும் உடல் முழுவதும் பூசி ஊறவைத்து பின் குளித்து வந்தால் முகமும், உடலும் வசீகரமாகும்.

## முடி உதிர்வை முடிவுக்கு கொண்டுவரும் கற்றாழை எண்ணெய் !!

கற்றாழை தலைமுடிக்கு அற்புதமான நன்மைகளைத் தருகிறது. கற்றாழையில் கூந்தலுக்கு தேவையான 100 விதமான சத்துக்கள் உள்ளன.

கற்றாழை ஜெல்லில் உள்ள புரோட்டியோலைடிக் என்சைம் தலையில் உள்ள இறந்த செல்களை நீக்கி மயிர்கால்களுக்கு போஷாக்கு கொடுத்து கூந்தல் வளர்ச்சியைத் தூண்டுகிறது.

கற்றாழை ஜெல் உங்கள் கூந்தலை மென்மையாக பட்டு போன்று மாற்றும். மேலும் இது முடி உதிர்வை கட்டுப்படுத்துவதோடு அழகான அடர்த்தியாக வளர பயன்படுகிறது.

**தேவையான பொருட்கள்:**– 1 கற்றாழை தண்டு சிறிது, தேங்காய் எண்ணெய்.

**செய்முறை:**– தண்டை இரண்டு பகுதிகளாக வெட்டி, கற்றாழை ஜெல்லை ஒரு சிறிய கிண்ணத்தில் எடுத்து கொள்ளவும். இந்த கற்றாழை ஜெல்லின் அரை கப் தேங்காய் எண்ணெய்யுடன் கலக்கவும். கற்றாழை தேங்காய் எண்ணெயின் விகிதம் 1:1 ஆக இருக்க வேண்டும்.




இந்த கலவையை மிதமான சூட்டில் சுமார் 5 முதல் 7 நிமிடங்கள் வரை சூடாக்கவும். அடுப்பை அணைத்து விட்டு குளிர்விக்கவும். கலவையை ஒரு இருண்ட பாட்டில் ஊற்றி, பயன்படுத்துவதற்கு முன்பு சுமார் 2 வாரங்களுக்கு குளிர்ந்த இடத்தில் சேமிக்கவும்.

**நன்மைகள்:**– இந்த வீட்டில் செய்த கற்றாழை தேங்காய் எண்ணெய் பொடுகு மற்றும் முடி உதிர்வுக்கு இது ஒரு சிறந்த எண்ணெய். இது முடி வளர்ச்சியை அதிகரிக்கிறது, பலவீனமான முடியை பலப்படுத்துகிறது. இது முடியை வலுவூட்டி, தலை முடி மற்றும் ஸ்கேல்ப் pH அளவை சமநிலையில் வைத்திருக்கும்.

## பூந்தி லட்டு செய்வது எப்படி?

இனிப்பு அல்லது ஸ்வீட் என்றாலே நமக்கு முதலில் நியாபகம் வருவது பூந்தி லட்டு. அந்த அளவிற்கு உணவு பிரியர்களிடையே பூந்தி லட்டு பிரசித்தம். அனைவரும் விரும்பி உண்ணும் ஒரு இனிப்பு வகைதான் இந்த பூந்தி லட்டு. இந்த பதிவில் பூந்தி லட்டு எப்படி செய்வது என்று பார்ப்போம் வாருங்கள்.

**தேவையான பொருட்கள்:–**



**கடலை மாவு – 1/4 கிலோ**
**சோடா உப்பு –சிறிதளவு**
**நெய் – 1 டேபிள் ஸ்பூன்**
**உலர்ந்த திராச்சை –20**
**முந்திரி – 20**
**கிராம்பு – 5**
**எண்ணெய் – தேவையான அளவு**
**சக்கரை – 1/2 கிலோ**
**ஏலக்காய் தூள் – சிறிதளவு**

**செய்முறை: –**

முதலில் ஒரு பவுலில் கடலை மாவினை கொட்டி அதனுடன் சோடாமாவு சேர்த்து தண்ணீர் ஊற்றி நன்றாக கலந்து வைத்து கொள்ளவும்.

பிறகு ஒரு தாளிக்கும் கரண்டி எடுத்து அதில் நெய் ஊற்றி திராட்சை, முந்திரி மற்றும் கிராம்பை வறுத்து எடுத்துக்கொள்ளவும்.

பிறகு ஒரு பாத்திரத்தில் சக்கரை போட்டு கொஞ்சமாக நீர் சேர்த்து கொதிக்கவைத்து சக்கரை பாகினை தயார் செய்ய வேண்டும்.

சக்கரை பாகு தயாராகும் வேளையில் ஒரு கடாயில் எண்ணெய் ஊற்றி நன்றாக கொதிக்க வைக்கவேண்டும். எண்ணெய் கொதிக்கும்போது கலந்து வைத்த மாவினை பூந்தி கரண்டி மூலம் எண்ணையில் போட்டு 30 நொடிகள் விட்டால் பூந்தி தயாராகிவிடும்.

இவ்வாறாக மொத்த மாவினையும் பூந்தி கரண்டி மூலம் ஊற்றி பூந்தியாக பொரித்து எடுக்கவும். பிறகு சக்கரை பாகினை அடுப்பில் இருந்து இறக்கி சூடு குறையும் முன் அனைத்து பூந்திகளையும் அதில் கொட்ட வேண்டும்.

மேலும் ஏற்கனவே பொரித்த திராச்சை,முந்திரி மற்றும் கிராம்பு ஆகியவற்றை அதில் கொட்டி நன்றாக கலந்து கொள்ள வேண்டும். பிறகு அதனை கையில் எண்ணெய் தடவி சமமான அளவில் சின்ன சின்ன உருண்டைகளாக உருட்டி வேறொரு தட்டில் வைத்து ஆறவைக்க வேண்டும். ஆறியதும் சுவையான பூந்தி லட்டு தயார்.




**நீ விரும்பிய ஒன்று**
**கடைசிவரை அழகாய்**
**தெரியவேண்டுமா?**

**தயவு செய்து**
**அதை தவறவிட்டுவிடு**



**கிடைத்ததும்**
**ஒரு நாள்**
**தொலைந்து**
**போகலாம்...!**
**பிடித்ததும்**
**ஒரு நாள்**
**வெறுத்து போகலாம்...!**

அரக்க பறக்க ஓடும்
உலோகாய யுகத்தில்
பாலைவனத்தில் தூண்டில்
மீனுக்காய் காத்திருப்பது போல்
இன்று மனித வாழ்க்கையும்
கண்களுக்கெட்டாத தூரத்தில்
தெரியும் திம்மதிக்கான
ஓர் பாதையை நாடி
காத்திருக்கிறது இந்த
கொரோனா சூழலில்...!



தொகுப்பு :- சப்தஹி

# பிள்ளையானின் தமிழ் இன விரோத கருத்துக்கள் - வடகிழக்கில் மீண்டும் ஆபத்து

**கடந்தவார தொடர்ச்சி...**

அவர்களையும் நல்லாட்சி அரசாங்கம் மகிழ்ச்சிப்பட வைத்தது. அதிலே சுமந்திரன் அவர்களும், அந்தநேரம் வெளிநாட்டு அமைச்சராக இருந்த மங்கள சமரவீர போன்றவர்கள் இதில் தலை யீடு செய்தார்கள். ஆகவே நல்லாட்சி அரசாங்கம் தான் நீதித்துறையை தனக்கு சாதகமாக பயன்படுத்தி மக்களையும் எங்களையும் பழி வாங்கியதற்கு நான் தான் சாட்சி. ஆனால் இன்று எம்பி ரஞ்சன் ராமநாயக்க அவர்கள் முழுக்க முழுக்க நீதித்துறையை கேவலப்படுத்தினார் என்பது உறுதிப்படுத்தப்பட்டு தீர்ப் பளிக்கப்பட்டிருக்கிறது. அந்த வழக்கோடு என்னுடைய வழக்கை சம்பந்தப்படுத்தி பல எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் பேசினார்கள். அதிலே கவலை என்னவென்றால் புரொ பசர் ஜெகான் ஜெயதிலக அவர்கள் கூட தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில் எழுதியிருக்கின்றார்.

அவரைப்போன்ற புத்திஜீவிகளுக்கு கூட பயங்கரவாத தடைச்சட்டம் என்றால் என்ன?, பிள்ளையான் தண்டிக்கப்பட்டவரா?. முன்னாள் சுகாதார அமைச்சர் ஆட்களை கடத்திவெட்டிதேர்தலுக்காகசெய்ததைப்போல் நல்லாட்சி அரசியலிலே சம்பந்தனை அல்லது சுமந்திரனை யாழ்ப்பாணத்து ஆட்களை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக செய்தவொரு குற்றச்சாட்டு. சாதாரண நீதித்துறையிலே என்னை அடைக்க முடியாது என்பதற்காக பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்தி அடைத்தார்கள். ஆனால் இன்று ரஞ்சன் ராமநாயக்க அல்லது அவருடைய கூட்டம் என்னை விடுதலை செய்து அவரை அடைக்கிறதாம். அவர் நீதித்துறையை எப்படி விபரித்தார்? என்ன எல்லாம் செய்தார்? என பல கதைகள் வெளிவந்ததை நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஆகவே சம்பந்தம் இல்லாத கதைகளை கதைக்காமல் எங்களை உங்களுடைய அரசாங்கம் எப்படி பழிவாங்கியது?. நீதித்துறையை நீங்கள் எப்படிப் பயன்படுத்தினீர்கள், எத்தனை நீதிபதிக்கு நீங்கள் பேசினீர்கள் என்பதை அறிந்து பாருங்கள்.

ஆனாலும் இந்த அரசாங்கம் ஏதோ ஜனாதிபதி தன்னுடைய பலத்தை பாவித்து விடுதலை செய்தார் என்ற மாயையை தோற்றுவிக்க எண்ணுகிறார்கள். ஜனாதிபதி அவர்கள் இந்த நாட்டில் ஜனாதிபதியாகி எத்தனை வருடம்? எனக்கு மட்டக்களப்பு மாவட்டத்திலே இடம்பெற்ற வழக்கின் முடிவின் பிரகாரம் இரண்டு பேர் கொடுத்த வாக்குமூலத்தை வைத்து வாக்கு நடத்த முடியாது. அது பிழை என்று நாங்கள் மேன்முறையீடு செய்திருந்தோம். அந்த மேல்முறையீட்டு தீர்ப்பு என்பது கிட்டத்தட்ட 37 பக்கம். 2020 ஆம் ஆண்டு 11 ஆம் மாதம் 14 ஆம் திகதி கொடுக்கப்பட்டது. இரண்டு நீதிபதிகள் இந்த தீர்ப்பை வெளியிட்டார்கள். இந்த தீர்ப்பில் என்னுடைய வழக்கோடு பல வழக்குகளை ஒப்பிட்டு காட்டியிருக்கிறார்கள். குறிப்பாக 7 வழக்கிலே மிக தெளிவான உத்தரவுகளை வழங்கப்பட்டதை குறிப்பிட்டு காட்டியிருக்கிறார்கள். மேல்முறையீட்டு நீதிமன்றம் பிள்ளையான் அவர்களை இந்த இரண்டு சாட்சிகளை வைத்து வழக்கு நடத்த முடியாது அதற்கான ஏதுக்கள் இல்லை என்று நிராகரித்ததன் காரணமாக அதை அடிப்படையாக வைத்து இன்று மட்டக்களப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. இவற்றையெல்லாம் விளங்கிக்கொள்ளாத எதிர்க்கட்சியினர் அரசியலுக்காக ஏதோ பிள்ளையான் ஒரு குற்றவாளி, ஜனாதிபதியினுடைய அதிகாரத்திலே விடுவித்ததென்ற ஒரு மாயையை தோற்றுவிக்க எண்ணுகிறார்கள்.

நான் இந்த வழக்கு சம்பந்தமாக ஜனாதிபதி அவர்களையோ, பிரதமரையோ சந்தித்தது கிடையாது. கதைத்ததும் கிடையாது. ஏன் எனக்கு தெரியும் இந்த வழக்கை நடத்த முடியாது. என்னை கைது செய்த சிஐடிக்கு தெரியும். அப்பொழுதிருந்த ஷாணி அபேசேகரவுக்கு தெரியும், அப்பொழுதிருந்த டீஏச்க்கு தெரியும். ஏன் மைத்திரிபால சிறிசேனவுக்குக் கூடத் தெரியும் இந்த வழக்கை நடத்த முடியாது என்று. இருந்தாலும் நான் ஏற்கனவே கூறியதைப்போன்று சிலரின் மனங்களை குளிர வைக்க வேண்டும். மாகாணசபையை நடத்தத் தேவையில்லை, அதிகாரங்களை கொடுக்கத்தேவையில்லை. ஐ.நா சபையில் கொண்டு வந்த தீர்மானங்கள், பயங்கரவாத தடைச்சட்டத்தை அகற்றக்கூடாது என்பதற்காக எல்லாவற்றையும் இணைத்து என்னுடைய வழக்கோடு சோடித்து விடுவதற்கான சந்தர்ப்பமாக பார்த்தார்கள்.

ஆகையால் முழுக்க முழுக்க அரசியல் ரீதியாக பழிவாங்கப்பட்டிருந்தேன். எமது கட்சி உறுப்பினர்களும், தொண்டர்களும், குறிப்பாக பிரச்சார செயலாளர்கள் போன்றவர்கள் என்னை விடுதலை செய்வதற்காக கணிசமாக உழைத்தார்கள். இன்று என்னுடைய தாய் மனமகிழ்ச்சியடைந்திருப்பார். எத்தனையோ தடவைகள் கண்ணீரிலே ஏங்கியிருப்பார் கரைந்திருப்பார். எங்களுடைய மட்டக்களப்பு மாவட்ட கட்சி தொண்டர்கள் எத்தனையோ கோவில்களுக்கு சென்று வழிபட்டு என்னை விடுதலை செய்ய வேண்டினார்கள். இவற்றிற்கான முடிவு கிடைத்திருக்கிறது. இவற்றையெல்லாம் 5 இல்லை 10 வருடங்கள் சிறைச்சாலையிலே கிடந்தாலும் மனங்கலங்கி உடைந்து அரசியலை விட்டு ஓரங்கட்டி ஒதுங்கும் மனிதனல்ல நான். நான் சிறைச்சாலைக்குள் இருந்து கொண்டே 54 ஆயிரம் விருப்பு வாக்குகளை பெற்றேன். வடகிழக்கில் எந்த தமிழனும் பெறாத வாக்குகளை மட்டக்களப்பு மக்கள் எனக்கு அழித்தார்கள். ஏன் இயல்பாகவே மட்டக்களப்பிலேபற்றுள்ளவர்கள்இறுதிவரை நிற்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. அந்தநம்பிக்கைக்குமக்களாகிய உங்களுக்கு நான் செய்து காட்டுவேன். என்னுடைய உறுதித்தன்மையையும் மட்டக்களப்பு மாவட்டத்தின் மீது வைத்துள்ள பற்றையும் தமிழர்களுக்கு அதிகார பகிர்விற்கே மாகாணசபை முறைமை தான் வேண்டும் என்ற நடைமுறையை நான் நடத்திக் காட்டுவதில் உறுதியாக இருக்கிறேன்.



ஆகவே சுமந்திரன் போன்றவர்கள் கொழும்பிலே இருந்துகொண்டு அவர்கள் அரசியல் செய்வதற்கு அல்லது சாணக்கியன் போன்றவர்கள் அங்கும் நின்று இங்கும் நின்று சிறுவயதிலே வெளிநாடுகளுக்கு சென்று ஆங்கிலம் கற்று கண்டியிலே நின்று படித்துவிட்டு நாங்கள் வரவில்லை. மக்களோடு நின்று 16 வயதிலே பாடசாலையை தூக்கியெறிந்துவிட்டு எங்களுடைய போராட்ட இயக்கத்திற்கு சென்று 2005 ஆம் ஆண்டு பிரபாகரன் எங்களை அடித்து கொல்லும் வரைக்கும் போராடினோம். அதற்கு பின்பு யாழ்ப்பாணக்காரர்கள் இப்படித்தான் முடிவெடுப்பார்கள். அவர்கள் எங்களை பயன்படுத்திவிட்டு இரத்தத்தில் நனையவிடுவார்கள் என்பதற்காக நாங்கள் இந்த முடிவை எடுத்து இந்த மண்ணையும் மக்களையும் காப்பாற்ற புறப்பட்டோம். எங்களுடைய தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி மிகப்பெரும் தியாகங்களும் அழிவுகளும் இரத்தங்களும் கலந்தவொரு கட்சி. எங்களுடைய மக்களுக்கு எந்த அடிப்படையிலும் ஒரு அநியாயம் செய்யாமல் மக்களை கட்டியணைத்து இன்று பிரபல்யமடைந்து 10 வருடங்களுக்கு பின்னர் ஒரு உயர்ந்த வளர்ச்சியை நாங்கள் அடைந்திருக்கின்றோம்.

இந்த வளர்ச்சியை தொடர்ந்தும் தக்க வைத்து முன்னேறுவதற்கான சந்தர்ப்பத்தை மக்கள் எங்களுக்கு தருவார்கள் என்று நான் உறுதியாக நம்புகின்றேன். ஏனென்றால் எங்களுடைய எண்ணம் தூய்மையானது, நோக்கம் தூய்மையானது இறுதிவரைக்கும் மட்டக்களப்பு கிழக்கு மாகாண தமிழர்களுடன் நான் பயணிப்பேன் என்ற எண்ணம் எனக்கு இருப்பதைப்போன்று கட்சிக்கும் இருக்கிறது. ஆகையால் அரசியல் காழ்ப்புணர்ச்சியால் சோடிக்கப்பட்ட வழக்குக்கு இன்று நீதித்துறையும் இறையும் எங்களுடைய உண்மையான எண்ணமும் ஜெயித்ததையிட்டு நான் மனமகிழ்ச்சியடைவதோடு குறிப்பாக நீதித்துறை என்னுடைய வழக்கிலே பலவிதமான தாமதங்களையும் பிரச்சினைகளையும் கொடுத்திருந்தாலும் கூட நீதித்துறை மறுக்கப்பட்ட காலத்தால் தாமதமான நீதி மறுக்கப்பட நீதி என்று சொல்வதைப்போல் தாமதமான நீதி கிடைக்கப்பெற்று நான் 5 வருடங்களுக்கு மேல் அடைக்கப்பட்டாலும் இன்று நீதி கிடைத்திருக்கின்றது என்று மனமகிழ்ச்சியடைகின்றேன். நீதித்துறையினருக்கு நன்றி செலுத்துகின்றேன். தொடர்ந்தும் இலங்கையின் சட்டத்தை மதிப்பேன். பொறுப்புவாய்ந்த அரசாங்கமானது இவ்வாறான இனவாத கருத்துக்கள் மூலம் தமிழினத்தை கூறுபோடுகின்றவர்களை இனங்கண்டு போராட்ட சூழ்நிலைகளை தவிர்த்துக்கொள்ளவேண்டும் என்பதே இன்று அனைவரதும் நிலைப்பாடும் கூட.

**இரணியன்**

## வாழ்க்கை தத்துவங்கள்

**நிஜங்கள் பலவற்றை கண்ணெதிரே தொலைத்து விட்டு இருளெனும் கனவில் தேடுகிறேன். நீண்ட நாட்களாக, பல மாதங்களாக, சில வருடங்களாக....**

**கல்லைச் சலவை செய்யும் அருவியே இந்த மனிதனின் மனதையும் ஒரு முறை சலவை செய்து விட்டு செல்வாயா?.**

**மனதில் பூக்கும் மல்லிகை பூ அன்பு. அதனைத் தூக்கி குப்பையில் போட்டால் கூட நறுமணம் வீசும்.**

**ஆயிரம் தடவை யோசித்து முடிவெடுப்பதை விட எடுத்த முடிவில் நிரந்தரமாய் இருப்பதே அழகு. நேரத்திற்கு தகுந்த மாதிரி செயற்படாதே.**

**திட்டமிடல் வாழ்கையில் அவசியமாய் இருக்கிறது, ஆனால் திட்டமிட்டபடி வாழ்வு செல்லாவிடின் வெறுப்பு ஏற்படுகிறது. உங்கள் அத்தியாவசியத் தேவைக்கு திட்டமிடுங்கள் வாழ்க்கையை திட்டமிடாதீர்கள்.**

**ஆயிரம் பேரின் கண்கள் உன்னை நோக்கினாலும் இரு கண்கள் மட்டுமே என்றும் உன்னை அன்பாக நோக்கும் - உன்னைப் பெற்றவள், நீ அவதரிக்க காரணமாய் இருந்தவர்.**

**கோபம் வருகின்ற பொழுது வார்த்தையின் அளவுகள் அதிகரிக்கின்றன. அன்பானவர்களைக்(அன்பானவரைக்) கூட எதிர்த்து விடுகின்றது..**

**கெட்டவனாக இருந்து கொண்டு நல்ல பெயர் எடுப்பதைவிட நல்லவனாய் இருந்து கெட்ட பெயர் எடுப்பது எவ்வளவோ மேல்..**

**கடற்கரையில் இருக்கும் கப்பலை விட கடலினுள் இருக்கும் படகின் பெறுமதி அதிகம். அது போல் மனிதா நீ உருவாக்கும் பொருள் உபயோகமானால் சிறப்பு.**

**பெருங் கடலுக்கு எல்லை சிறிய நிலப்பரப்பு. உனக்கு எல்லை உனது பெற்றோர்.**

**கடல் எல்லையைத் தாண்டினால் நிலம் அழிந்துவிடும். நீ எல்லையைத் தாண்டினால் நீ அழிந்து விடுவாய்.**

**தந்தையின் நம்பிக்கை இருக்கும் வரை தனயன்(மகன்) வழி தவறான்.**

# முஸ்லீம்களின் ஜனாசா எரிப்பு விவகாரத்தில் வெள்ளைக்கொடி பிடிக்கும் சாணக்கியன்

## கிழக்கு மாகாண மட்டக்களப்பு மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் அவர்களுடனான சிறப்பு நேர்காணல்



**கடந்தவார தொடர்ச்சி...**

இதைக் கதைப்பதற்கு ஒரு சில தமிழ் அரசியல்வாதிகளால் முடியாது. ஆனால் எங்காவது முஸ்லீம் ஒருவருக்கு 10 பேர்ச் காணியை வழங்கியிருந்தால் அது தவறு என்று போர்க்கொடி எழுப்பும் ஒரு சிலர், ஐயாயிரம் ஏக்கர் சிங்களவர் எடுப்பதை கதைக்க முடியாது. அந்த வகையில் இனி வருங் காலங்களில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் பேசும் மக்கள் ஒன்றுபடாவிட்டால் இன்னும் ஒரு 50, 60 வருடங்களில் தமிழரும் முஸ்லீம்களும் சேர்ந்தால் கூட இந்த நாட்டில் சிறுபான்மை இனமாக வாய்ப்பு இருக்காது.

**கேள்வி : தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமைக்கு இவர்கள் முட்டுக்கட்டையாகத்தான் இருந்தார்கள். ஒஸ்லோவில் நடந்த பேச்சுவார்த்தையில்,**

**பதில் :-** கடந்த காலத்தைப் பற்றி நாம் கதைத்துக்கொண்டிருந்தால் எதிர்காலம்...

**கேள்வி:-ஈழப்போரின்இறுதிக்கட்டத்திலே ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் மக்கள் கொலை செய்யப்பட்டபோது பாற்சோறு பொங்கி புத்தளத்தில், அம்பாறையில், கொழும்பில் கொண்டாடினார்கள். அன்று இறந்தவர்கள் பிள்ளைகள் இல்லையா? அவற்றை ஏன் நீங்கள் சுட்டிக்காட்டுவதில்லை?**

**பதில்:-** அவற்றைச் சுட்டிக் காட்டுவதால் நாம் எதை அடைய முடியும். அனைவருக்கும் தெரிந்த விடயம் தானே. என்னைப் பொறுத்தவரையில் கடந்த காலத்தில் நடந்த விடயங்களை வைத்து செயற்படுவதாகவிருந்தால் சாணக்கியன் சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் அமைப்பாளராக இருந்தார். அவருக்கு நாங்கள் சந்தர்ப்பம் வழங்கக்கூடாது என்று மக்கள் நினைத்திருக்கலாம். இந்த முறை மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழரசுக்கட்சிக்கு பாராளுமன்ற உறுப்பினர் இல்லாத நிலை வந்திருக்கலாம். என்னைப் பொறுத்தவரை நாங்கள் எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்க வேண்டும்.நான்பதில்கூறவேண்டிய நபர். இயற்கையாக நான் எவ்வளவு காலம்வாழ்வேன்என்பதுதெரியாது. 30 வயதிற்கு பிறகு வருபவர்களுக்கு நான் பதில் கூறவேண்டும். சரி இனப்படுகொலை நடந்தது. 2009 ஆம் ஆண்டு நடந்த விடயங்களை வைத்து நாம் 2021ஆம் ஆண்டு கதைத்து நாம் தீர்மானங்களை எடுக்கப்போகிறோம் என்றால் 2051ஆம் ஆண்டு நாங்கள் 2021ஆம் ஆண்டு செய்த விடயங்களைப் பற்றி கதைத்துக்கொண்டிருப்போம்.

**கேள்வி :- நீங்கள் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்கிற கோட்பாட்டிலிருந்து விலகிச் செல்வதாகத்தான் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகிறது?**

**பதில்:-** தாயகம், தேசியம் என்பதை அடையவேண்டுமாகவிருந்தால் வடகிழக்கு மாகாணங்கள் இணைந்த இரு சிறுபான்மை மக்களையும் இணைத்தே அடையவேண்டுமே தவிர, ஒரு இனத்தை ஒதுக்கிச்செல்ல முடியாது. வரலாறுகளை வைத்துக்கொண்டு இப்படிச் செய்யக்கூடாது என்று கூறக்கூடாது. ஒரு காலத்தில் வடகிழக்கு தமிழர் தாயகம் என்று கதைத்தவர்கள் தான். அந்த இலக்கை அடைவதாயின் இந்த சிறுபான்மை இன இரு மக்களும் இணையத்தான் வேண்டும். கடந்த காலத்தில் நடந்த சில கசப்பான சம்பவங்களை நாங்கள் மறக்கத்தான் வேண்டும். அவற்றை விட்டுவிட்டு நாங்கள் அவர்கள இப்படித் தான் செய்தார்கள் ஆகவே நாங்கள் இப்படித்தான் செய்வோம் என்றால், நாங்கள் வடகிழக்கு இணைப்பையும் விட்டுவிட்டு, வடகிழக்குத் தான் எமது தாயகம் என்பதையும் மறந்து இந்த நாடு சிங்கள - பௌத்த நாடு. நாங்கள் எல்லோரும் பத்து வீதம் தான் இந்நாட்டில் வாழ்கிறோம் என அதை இழப்பதற்கு நான் தயாராக இல்லை.

**கேள்வி :- முஸ்லீம்கள் இணைவார்கள் என்கிற நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறதா?**

**பதில்:-** அந்த நம்பிக்கையை நாங்கள் உருவாக்கவேண்டும். அப்படி இணையாவிட்டால் நாங்கள் விரும்புகிற தீர்வினை அடைய முடியாது.

**கேள்வி :- தனி அலகு கோருகிறார்களே. அதனை எவ்வாறு வழங்குவீர்கள்?**

**பதில்:-** கிழக்கு மாகாணத்தில் 40 வீதம் முஸ்லீம்கள் இருந்தால் வடக்கும் கிழக்கும் இணைந்து சிறுபான்மை மக்கள் எங்களை ஆளுவதற்கான ஒரு நிலைமையை உருவாக்குவதற்காக முஸ்லீம்களுடனும் நாங்கள் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும். நீங்கள் எதை எதிர்பார்க்கிறீர்கள். அதற்கு இரு இனங்களுக்கிடையில் நடக்கும் விரோதங்களை நிறுத்தினால் மாத்திரம் தான் இந்தப் பேச்சுவார்த்தைகளை நாம் ஆரம்பிக்கலாம். அவர்களும் கிழக்கில் பிறந்தவர்கள் தானே. கிழக்கில் பிறந்த முஸ்லீம் ஒருவருக்கு பத்து பேர்ச் காணி வழங்க ஒரு சில ஆளுங்கட்சி மற்றும் தமிழ் அரசியல்வாதிகள் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். ஆனால் எங்கேயோ இருக்கும் ஒரு சிங்களவருக்கு இங்கு ஐயாயிரம் ஏக்கரில் காணி வழங்கும் போது அதற்கு எதிர்ப்பு தெரிவிக்க முடியவில்லை.

**கேள்வி :- முஸ்லீம் அரசியல்வாதிகள் எந்தவொரு காலகட்டத்திலும் தமிழ் மக்களுடன் இணக்க அரசியலைச் செய்யவில்லையே?**

**பதில்:-** இன்று முஸ்லீம் அரசியல்வாதிகளை முஸ்லீம் மக்களும் நிராகரிக்கும் நிலை இருக்கிறது. அவ்வளவு நம்பிக்கை இழந்திருக்கிறார்கள். கடந்த காலத்தில் ஐநா ஜெனீவா கூட்டத்தொடருக்கு செல்கின்றபோது இலங்கையில் இருக்கும் முஸ்லீம் அமைப்புக்களை இலங்கையரசு கூட்டிச்சென்று இஸ்லாமிய நாடுகளுடன் கதைத்து இலங்கைக்கு ஆதரவாக வாக்களிக்குமாறு கேட்டுக்கொண்டது. ஆனால் இன்று நிலைமைகள் மாறியிருக்கிறது. இன்று இஸ்லாமிய நாடுகள் இலங்கைக்கு எதிராக வாக்களிக்கும் நிலைமை உருவாக்கப்பட்டுள்ளது. காலம் மாறிவிட்டது. ஐநா மனித உரிமைப் பேரவையில் தமிழர்களுக்கு ஆதரவாக இலங்கைக்கு எதிராக 47 நாடுகளில் 24 நாடுகள் வாக்களித்தால் சாத்தியமாகும் நிலைமைகள் இருக்கிறது. நாம் தூர நோக்குடன் செயற்படவேண்டுமே தவிர, இது நடந்தது அது நடந்தது என ஒவ்வொரு அங்குலமாக பார்த்துக் கொண்டிருந்தால் பயனற்றதாக அனைத்தும் மாறிவிடும்.

**கேள்வி : இந்த முஸ்லீம்கள் ஒரிடத்திலும் மனிதாபிமானத்தைக் காட்டவில்லை. ஈராக்கில் அல்லாஹ்வின் பெயரால் கழுத்தறுத்து நூற்றுக் கணக்கானவர்களைக் கொலை செய்கிறார்கள்.சஹ்ரானினுடையகுண்டுத் தாக்குதலின் போது கூட தமது மதத்தை ஏற்றுக்கொள்ளாதவர்கள் கொலை செய்யப்படவேண்டும் என்றும் காணொளிகளை வெளியிட்டார்கள். இவ்வாறிருக்கையில் அவர்களுடன் இணைந்து வாழ்வது எப்படி?**

**பதில்:-** அது கடும் தீவிரப் போக்குடைய இஸ்லாமியர்கள் என்று கூறலாம். உண்மையில் நான் தொடர்ச்சியாக பாராளுமன்ற உறுப்பினராக இருக்கவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 22 ஆசனங்களை எடுக்கவேண்டும். கடந்த தேர்தலில் கூட மட்டக்களப்பில் 4 ஆசனமும், திருகோணமலையில் 2, அம்பாறையில் 1 ஆசனமும் எடுத்திருந்தால் நாம் ஒரேயொரு ஆயுதத்தை பயன்படுத்தியிருக்கலாம். என்ன ஆயுதம் என்றால் கிழக்கில் நாங்கள் முஸ்லீம்களை முழுமையாக அழிக்கவேண்டும் என்று குரல் கொடுத்திருந்தால் ஆசனங்களை பெற்றிருக்கலாம். வியாழேந்திரனும் பிள்ளையானும் இதனையே செய்து வெற்றி பெற்றனர். இதனைச் செய்திருந்தால் நாங்களும் அதிகமான ஆசனங்களைப் பெற்றிருக்கலாம். ஆனால் மக்களுக்குப் பயன் என்ன? நான் தொடர்ச்சியாக பாராளுமன்ற உறுப்பினராக இருக்கவேண்டும் என்பது மட்டுமே எனது சிந்தனை அல்ல. அடுத்த முறை நான் மக்களுக்கு உண்மையைச் சொல்வதனால் என்னை அடுத்த தேர்தலில் மக்கள் நிராகரிப்பார்கள் என்றால் நிராகரிக்கட்டும். அதில் எனக்கு கவலையில்லை. நான் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கவேண்டும் என்பதற்காக அரசியல் நடத்துபவன் நான் இல்லை. சிறுபான்மை மக்கள் இணைந்தால் தான் வடகிழக்கில் வடகிழக்கு இணைந்தது தமிழ்த் தேசிய மக்களின் தாயகம் என்ற நிலைப்பாடு இருக்குமே தவிர, நீங்கள் ஈராக்கினை பற்றி கதைக்கிறீர்கள் நான் இலங்கையைப் பற்றிக் கதைக்கிறேன்.

**கேள்வி :- அரசாங்கங்கள் பள்ளிவாசல்களை அழித்தது. கலகொட அத்தே ஞானசார தேரர் இவர்களுக்கு எதிராகசெயற்படுகிறார்.இந்த காலங்களில் கூட அரசுடன் தொடர்ந்து கூட்டை வைத்துக்கொண்டு அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொண்டு தமிழினத்துக்கு எதிராக செயற்படுபவர்களுக்கு நீங்கள் குரல் கொடுப்பது எந்த வகையில் நியாயம்?**

**பதில்:-** என்னைப் பொறுத்தளவில் 2010-2013 வரையான காலப் பகுதிகளில் இலங்கைக்கு ஆதரவாக வாக்களிக்கக் கூறிய அதே இஸ்லாமிய மதத் தலைவர்கள் இன்று இஸ்லாமிய நாடுகள் இலங்கைக்கு எதிராக வாக்களிக்கக் கூறும் அளவிற்கு காலம் மாறியிருக்கிறது. நீதியமைச்சு அரசுடன் இணைந்தது. அவர் கோட்டபாய ராஜபக்சவின் சட்டத்தரணி. அவரை தேசியப் பட்டியல் மூலம் கொணர்ந்தார்கள். அலி சப்ரி அவர்கள் ஒரு சட்டத்தரணி. அவர்கள் கூறுகின்ற கருத்துக்கள் ஒட்டுமொத்த இஸ்லாமிய சமூகத்தவர்களுடையது அல்ல. இன்று இருக்கும் முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தற்போது ஒரு தேர்தல் நடந்தால் இவர்கள் அனைவரும் தோல்வியடைவார்கள். உறுதியாகச் சொல்கிறேன் ஏனெனில் இன்று மக்கள் மத்தியில் வெறுப்பு ஏற்பட்டிருக்கிறது.

தொடரும்...

**நேர்காணல் - இரணியன்**




## பல்வேறு சிக்கல்களுடன் மீண்டும் செயல்பாட்டுக்கு வந்தது சிக்னல் அப்

அதிக பயனர்களால் நீண்ட நேரம் முடங்கியிருந்த சிக்னல் ஆப் பல்வேறு சிக்கல்களுடன் மீண்டும் செயல்பாட்டுக்கு வந்தது.

சிக்னல் செயலி பல மணி இடையூறுக்கு பின் மீண்டும் செயல்பாட்டுக்கு வந்துள்ளது. வட்ஸ்அப் செயலியின் புது அறிவிப்பு காரணமாக பல லட்சம் பயனர்கள் திடீரென சிக்னல் செயலிக்கு மாறியதால் தொழில்நுட்ப குறைபாடு ஏற்பட்டதாக சிக்னல் தெரிவித்தது.

வட்ஸ்அப் தனது பயனர் விவரங்களை பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராமுடன் பகிர்ந்து கொள்வதாக அறிவித்ததை தொடர்ந்து சிக்னல் செயலி அதிக டவுன்லோட்களை பெற்றது.

தற்சமயம் இடையூறுக்கு பின் செயலி மீண்டும் செயல்பட துவங்கி இருந்தாலும், பலர் சேவை சீராக இயங்கவில்லை என தெரிவித்து வருகின்றனர். இதற்கு பதில் அளித்த சிக்னல், அடுத்த அப்டேட்டில் குறைகள் சரி செய்யப்படும் என தெரிவித்து இருக்கிறது.




## 3டி முறையில் ஸ்கேன் செய்யப்பட்ட உலக அதிசயம்!

பிரேஸில்: ரியோ டி ஜெனிரோவிலுள்ள உலக அதிசயங்களில் ஒன்றான ரெடீமர் சிலை 3 டி லேசர் தொழிநுட்பம் மூலம் ஸ்கேன் செய்யப்பட்டுள்ளது.

கிறிஸ்ட் தி ரெடீமர் (Christ The Redeemer )என்று அழைக்கப்படும் இச் சிலையின் 90 ஆவது ஆண்டு மறுசீரமைப்பை முன்னிட்டு அதன் கட்டுமானப் பணிகள் குறித்து ஆய்வ நடத்த முடிவு செய்யப்பட்டது.

அதற்காக ஜியோஸ்பேடியல் மேப்பிங் முறையில் சிலை முழுவதும் 3டி முறையில் லேசர் உதவியுடன் ஸ்கேன் செய்யப்பட்டது. இதன் மூலம் மக்கள் இதுவரை பார்த்திராத ரெடீமர் சிலையின் உள்புறக் காட்சிகள் வெளியாகின.





## வட்ஸ்அப் பிரைவசி பாலிசி விவகாரம் - ஆய்வில் வெளியான அதிர்ச்சி தகவல்

வட்ஸ்அப் பிரைவசி பாலிசி விவகாரம் குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் வெளியான அதிர்ச்சி தகவல் பற்றி தொடர்ந்து பார்ப்போம். வட்ஸ்அப் செயலியில் புதிய பிரைவசி பாலிசி மாற்றம் குறித்த அறிவிப்பு அதன் பயனர்கள் மத்தியில் பெரும் எதிர்ப்பை பெற்றது. பலர் வட்ஸ்அப் செயலிக்கு மாற்றாக சிக்னல், டெலிகிராம் என பல்வேறு செயலிகளை பயன்படுத்த போவதாக தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், தனியார் நிறுவனம் மேற்கொண்ட ஆய்வில் வட்ஸ்அப் பயனர்களில் வெறும் 18 சதவீதம் பேர் மட்டுமே செயலியை தொடர்ந்து பயன்படுத்த இருப்பதாக தெரிவித்து இருக்கின்றனர். இந்தியா முழுக்க 244 மாவட்டங்களில் சுமார் 24 ஆயிரம் பேரிடம் வட்ஸ்அப் பிரைவசி பாலிசி மாற்றம் பற்றிய கேள்வி கேட்கப்பட்டது. ஆய்வில் பங்கேற்று கேள்விகளுக்கு பதில் அளித்தவர்களில் சுமார் 18 சதவீதம் பேர் தொடர்ந்து வட்ஸ்அப் பயன்படுத்த விரும்புவதாகவும், தங்களின் தரவுகளை பேஸ்புக்குடன் பகிர்ந்து கொள்ள அனுமதி அளிப்பதாகவும் தெரிவித்தனர். 26 சதவீதம் பேர் வட்ஸ்அப் பயன்பாட்டை குறைத்து மற்ற செயலிகளை பயன்படுத்த இருப்பதாக தெரிவித்தனர். வட்ஸ்அப் சேவைக்கு போட்டியாக விளங்கும் டெலிகிராம் மற்றும் சிக்னல் செயலிகளின் பயனர் எண்ணிக்கை ஜனவரி 6 முதல் ஜனவரி 10 ஆம் திகதிக்குள் மட்டும் 40 லட்சம் வரை அதிகரித்து இருக்கிறது. இதே காலக்கட்டத்தில் வட்ஸ்அப் டவுன்லோட் எண்ணிக்கை 35 சதவீதம் சரிவடைந்து உள்ளது.



## இரண்டு புதிய வயோ லேப்டாப்கள் இந்தியாவில் அறிமுகம்




வயோ பிராண்டின் இரண்டு புதிய லேப்டாப் மாடல்கள் இந்திய சந்தையில் அறிமுகமாகி இருக்கின்றன.

இந்தியாவில் மீண்டும் ரீ-என்ட்ரி கொடுக்க இரண்டு புதிய லேப்டாப்களை வயோ பிராண்டு அறிமுகம் செய்து இருக்கிறது. இவை வயோ.15 மற்றும் வயோ எஸ்.14 லேப்டாப் என அழைக்கப்படுகின்றன.

இரண்டு புதிய வயோ லேப்டாப் மாடல்களிலும் ஃபுல் ஹெச்டி ஐபிஎஸ் டிஸ்ப்ளே, மைக்ரோசாப்ட் ஆபிஸ் 365, விண்டோஸ் 10 ஹோம் எடிஷன், டால்பி ஆடியோ மற்றும் ஸ்மார்ட் ஆம்ப்ளிபையர் வசதி கொண்ட ஸ்பீக்கர்கள் வழங்கப்பட்டு இருக்கின்றன.

வயோ எஸ்.14 ஏற்கனவே மலேசியாவில் விற்பனை செய்யப்படுகிறது. இந்தியாவில் தற்சமயம் அவிட்டா நோட்புக் மாடல்களை விற்பனை செய்யும் நெஸ்ட்கோ நிறுவனம் தான் வயோ பிராண்டை இந்தியாவுக்கு மீண்டும் கொண்டு வந்து உள்ளது.

இரண்டு புதிய வயோ லேப்டாப்களும் இந்திய சந்தையில் ப்ளிப்கார்ட் தளத்தில் விற்பனை செய்யப்பட இருக்கின்றன. வயோ ,15 மாடல் பிளாக் மற்றும் டின் சில்வர் நிறங்களில் கிடைக்கிறது. இந்தியாவில் இந்த லேப்டாப் மாடல் விலை ரூ. 66,990 என நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

வயோ எஸ்.14 மாடல் டார்க் கிரே மற்றும் ரெட் சூப்பர் நிறங்களில் கிடைக்கிறது. இதன் விலை ரூ. 84,690 என நிர்ணயம் செய்யப்பட்டு இருக்கிறது. முதற்கட்டமாக இரு வயோ லேப்டாப்களின் முன்பதிவு துவங்கி நடைபெற்று வருகிறது.




## இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள் இருவருக்கு கொவிட்-19

இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள் இருவர் கொவிட்-19 தொற்றுக்குள்ளாகி உள்ளதாக ஸ்ரீ லங்கா கிரிக்கெட் இன்று உறுதிப்படுத்தியுள்ளது.

சாமர கருணாரத்ன மற்றும் பினுர பெர்னாண்டோ ஆகிய வீரர்களே தொற்றுக்காளானதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக நடைபெறவிருக்கும் வரையறுக்கப்பட்ட தொடருக்காக வேகப்பந்து வீச்சு பயிற்சியில் ஈடுபட்டு வந்த நிலையிலேயே கொவிட்-19 தொற்றுக்காளாகியுள்ளனர்.

Sri Lanka Cricket

பாதிக்கப்பட்ட வீரர்கள் சிகிச்சை வசதிகளுக்காக கொண்டு செல்லப்படுவர் என்றும் அவர்களுடன் தொடர்பிலுள்ளவர்களைக் கண்டறியவுள்ளதாகவும் ஸ்ரீ லங்கா கிரிக்கெட் கூறியுள்ளது.



## இந்தியாவுக்கு எதிரான கிரிக்கெட் தொடர் : 16 பேர் கொண்ட இங்கிலாந்து அணி அறிவிப்பு!

இங்கிலாந்து அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து நான்கு டெஸ்ட், 3 ஒருநாள், ஐந்து இருபதுக்கு 20 போட்டிகளில் விளையாடவுள்ளது.

முதலில் நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெறவுள்ளது. அந்தவகையில் முதல் டெஸ்ட்டானது பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி சென்னையில் நடைபெறவுள்ளதோடு 2-வது டெஸ்ட் போட்டியும் சென்னையிலேயே நடைபெவுள்ளது. இவ் இரண்டு போட்டிக்கான இந்திய அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. இந் நிலையில் இன்று 16 பேர் கொண்ட இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**ஜோ ரூட் தலைமையிலான இங்கிலாந்த அணி விவரம்**

**ஜோரூட் Joe Root (தலைவர்), 2. ஜொஃப்ராஆர்சர், 3. மொயீன்அலி, 4. ஜேம்ஸ்ஆண்டர்சன், 5. டாம்பெஸ், 6. ஸ்டூவர்ட்பிராட், 7. ரோரிபேர்ன்ஸ், 8. ஜோஸ்பட்லர், 9. ஜாக்கிராவ்லி, 10. பென்போக்ஸ், 11. டான்லாரன்ஸ், 12. ஜேக்லீச், 13. டாம்சிப்லி, 14. பென்ஸ்டோக்ஸ், 15. ஒல்லிஸ்டோன், 16. கிறிஸ்வோக்ஸ்.**

**மேலதிக வீரர்கள்:-**

**ஜேம்ஸ்பிரேசி, 2. மேசன்கிரேன், 3. சகிப்மெஹ்மூத், 4. மேத்யூபார்கின்சன், 5. ஒல்லிராபின்சன், 6. அமர்விர்தி.**



## இந்தியா திரும்பியதும் தந்தையின் கல்லறைக்கு முதலில் சென்றார் முகமட் சிராஜ்



நான்காவது டெஸ்டில் இந்திய அணி வெற்றி பெறுவதற்கு முக்கிய காரணமாக விளங்கிய இளம் வேகப்பந்து வீச்சாளர் முகமட் சிராஜ் அன்று(2021.01.21) காலை இந்தியா திரும்பியவுடன் நேரடியாக தனது தந்தையின் கல்லறைக்கு சென்றுள்ளார்.

ஹைதராபாத்தில் உள்ள தனது தந்தை முகமட் கவுஸின் கல்லறைக்கு சிராஜ் சென்றுள்ளார். நுரையீரல் பாதிப்புகளுக்கு உள்ளாகியிருந்த சிராஜின் தந்தை சிராஜ் அவுஸ்திரேலியா சென்ற ஒரிரு நாட்களில் உயிரிழந்தார்.

## தாய்லாந்து ஓபன் பட்மிண்டன் : கால்இறுதிக்கு இந்திய வீராங்கனை சிந்து தகுதி!

தாய்லாந்து ஓபன் சர்வதேச பட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி.வி. சிந்து மலேசியாவின் கிசோனா செல்வதுரையை தோற்கடித்து கால்இறுதிக்கு முன்னேறினார்.

தாய்லாந்து ஓபன் சர்வதேச பட்மிண்டன் போட்டி பாங்காக் நகரில் நடந்து வருகிறது. இதில் அன்றைய தினம் நடைபெற்ற பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் 2ஆவது சுற்றுப் போட்டியில் உலக சாம்பியனான இந்தியாவின் பி.வி. சிந்து 21-10, 21-12 என்ற நேர் செட் கணக்கில் மலேசியாவின் கிசோனா செல்வதுரையை தோற்கடித்து கால்இறுதிக்கு முன்னேறினார்.



## சிஎஸ்கே அணியில் கேதார் ஜாதவ், ஷேன் வாட்சன் உட்பட ஆறு வீரர்கள் நீக்கம்!

இவ்வாண்டு நடைப்பெறவுள்ள ஐபிஎல் டி20 தொடரில் கேதார் ஜாதவ், முரளிவிஜய் உட்பட ஆறு வீரர்களை நீக்கியுள்ளதாக சென்னை சூப்பர் கிங்ஸ் அணி அறிவித்துள்ளது. இவ்வாண்டில் நடக்க இருக்கும் 14-வது ஐபிஎல் தொடரில் பங்கேற்கும் 8 அணிகளும் தாங்கள் தக்கவைக்க மற்றும் நீக்க விரும்பும் வீரர்கள் பட்டியலை 21ஆம் திகதிக்குள் அளிக்க வேண்டும். சிறிய அளவிலான ஏலம் பெப்ரவரி மாதம் 2 அல்லது 3-வது வாரத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிலையில் ஐ.பி.எல் தொடரில் பங்கேற்கும் 8 அணிகளும் தாங்கள் தக்கவைக்கும் மற்றும் நீக்க விரும்பும் பட்டியலை தற்போது வெளியிட்டு வருகின்றன. அந்தவகையில் சிஎஸ்கே நிர்வாகம் கடந்த தொடரில் அதிரடியாக விளையாடாமல் ரசிகர்களின் கடுங்கோபத்தை சம்பாதித்து கொண்ட கேதார் ஜாதவை அணியிலிருந்து நீக்கியுள்ளது.

அதே போல் சுழற்பந்து வீச்சாளர் பியூஸ் சாவ்லா, தொடக்க ஆட்டக்காரர் முரளி விஜய் மற்றும் மோனு சிங் ஆகிய வீரர்களையும் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுப்பெற்ற ஷேன் வாட்சன், ஒப்பந்ததை முடித்துக் கொண்ட ஹர்பஜன் சிங் ஆகியோரையும் நீக்கப் பட்டியலில் சேர்த்துள்ளது. அடுத்த மாதத்தில் நடைபெற இருக்கும் ஏலத்தில் ஆறு இந்திய வீரர்கள் மற்றும் ஒரு வெளிநாட்டு வீரர் ஆகியோரை சென்னை எடுக்கவுள்ளது. வரும் இந்த ஆண்டு தொடரிலாவது சென்னை அணி மற்ற அணிகளைப் போல் இளம் சிங்கங்களை கொண்டு களத்தில் மீண்டும் தனது சாதனைப் பயணத்தை தொடரும் என்று எதிர்பார்த்து ஆவலோடு காத்திருக்கின்றனர் சென்னை அணி ரசிகர்கள்!




## ஜேர்மனியில் பெப்ரவரி 14ஆம் திகதி வரை ஊரடங்கு நீட்டிப்பு!

ஜேர்மனியில் கொரோனாத் தொற்றின் பரவலை கட்டுப்படுத்த பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி வரை ஊரடங்கு நீட்டிக்கப்படுவதாக அந்நாட்டு பிரதமர் ஏஞ்சலா மெர்கல் அறிவித்துள்ளார். ஐரோப்பிய நாடுகளில் கொரோனா தொற்றின் 2ஆவது அலை தீவிரமாக பரவி வரும் நிலையில் ஜேர்மனியில் ஊரடங்கு உத்தரவு நீட்டிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்கு காலத்தில் அத்தியாவசிய பொருட்கள் விநியோகிக்கும் கடைகள் மட்டுமே திறந்திருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், பணியாளர்கள் வீட்டில் இருந்தே பணி செய்ய நிறுவனங்கள் அனுமதிக்க வேண்டும் என்றும் அந்நாட்டு பிரதமர் தெரிவித்துள்ளார்.



## பிலிப்பைன்ஸில் கொவிட்-19 தொற்றினால் பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு!

பிலிப்பைன்ஸில் கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்றினால், மொத்தமாக பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். அண்மைய உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்களின் படி, பிலிப்பைன்ஸில் பத்தாயிரத்து 42பேர் உயிரிழந்துள்ளனர்.



உலகளவில் கொவிட்-19 தொற்றினால் அதிக பாதிப்பினை எதிர்கொண்ட 32ஆவது நாடாக விளங்கும் பிலிப்பைன்ஸில் இதுவரை மொத்தமாக ஐந்து இலட்சத்து ஐந்தாயிரத்து 939பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த 24 மணித்தியாலத்தில் மட்டும் வைரஸ் தொற்றினால், ஆயிரத்து 862பேர் பாதிக்கப்பட்டதோடு, 64பேர் உயிரிழந்துள்ளனர்.

தற்போதுவரை வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட 28ஆயிரத்து 904பேர் அங்குள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 727பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. அத்துடன் இதுவரை வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட நான்கு இலட்சத்து 66ஆயிரத்து 993பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

## 60 நாடுகளில் பரவியுள்ள உருமாறிய கொரோனா- உலக சுகாதார அமைப்பு கவலை!

இங்கிலாந்தில் உருவான உருமாறிய கொரோனா வைரஸ் தற்போது வேகமாகப் பரவி வரும் நிலையில் குறைந்தது 60 நாடுகளில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த வைரஸ் கடந்த ஒரு வாரத்திற்கு முன்பை விட பத்து மடங்கு பரவியுள்ளதாக உலக சுகாதார அமைப்பு அன்று (புதன்கிழமை) வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் உருமாறிய வைரஸ் கடந்த டிசம்பர் நடுப்பகுதியில் முதன்முதலில் கண்டறியப்பட்ட நிலையில், முன்னைய கொரோனா வைரஸை விட 50 முதல் 70 வீதம் வரை அதிக வீரியத்தைக் கொண்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றினால் ஏற்பட்டுள்ள உலகளாவிய இறப்பு எண்ணிக்கை, தற்போது இரண்டு மில்லியனைக் கடந்துள்ள நிலையில், வைரஸின் புதிய வகைகள் ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், உலகெங்கிலும் உள்ள நாடுகள் தடுப்பூசிகள் பரவலாகக் கிடைக்கும் வரை நோய்த் தொற்றுகளை கட்டுப்படுத்துவதில் தீவிரம் காட்டி வருகின்றன.


இதனிடையே, தென்னாப்பிரிக்க கண்டறியப்பட்டுள்ள உருமாறிய வைரஸ், பிரித்தானியாவைப் போலவே தீவிர பரவலைக் கொண்டுள்ள போதும் ஆபத்தானதாகத் தெரியவில்லை என உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

## ஜனநாயகம் மீண்டும் வெற்றிபெற்றுள்ளது - அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி

அமெரிக்காவில் மீண்டும் ஜனநாயகம் வெற்றிபெற்றுள்ளது என புதிய ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள ஜோ பைடன் தெரிவித்துள்ளார். பதவியேற்ற பின்னர் ஆற்றிக்கொண்டிருக்கும் உரையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது இது அமெரிக்காவின் நாள் இது ஜனநாயகத்தின் நாள் வரலாற்றினதும் நம்பிக்கையினதும் நாள்.அமெரிக்கா சோதிக்கப்பட்டுள்ளது சவாலில் அது வெற்றிபெற்றுள்ளது.இன்று நாங்கள் ஒரு வேட்பாளரின் வெற்றியை கொண்டாடவில்லை ஒரு நோக்கம் இலக்கு வெற்றி பெற்றதை கொண்டாடுகின்றோம்.ஜனநாயகம் என்ற நோக்கம் வெற்றிபெற்றதை கொண்டாடுகின்றோம்.

ஜனநாயகம் என்பது விலைமதிப்பற்றது என்பதை நாங்கள் உணர்ந்துள்ளோம்.ஜனநாயகம் என்பது பலவீனமானது என்பதை உணர்ந்துள்ளோம் இந்த தருணத்தில் ஜனநாயகம் வெற்றிபெற்றுள்ளது. இந்த புனிதமானபகுதியில் - சிலநாட்களிற்கு முன்னர் வன்முறைகள் நாடாளுமன்றத்தின் அடிப்படையையே ஆட்டக்காணசெய்யும் இந்த புனிதமான பகுதியில் நாங்கள்ஒருதேசமாகஆண்டவனின்கீழ்பிளவுபடாமல்கடந்தஇரண்டுநூற்றாண்டுகளைபோல அமைதியான முறையில் அதிகாரத்தை கையளிப்பதற்காக நாங்கள் ஒன்றிணைந்துள்ளோம். இன்று இந்த ஜனவரி நாளில் எனது முழு ஆன்மாவும் அமெரிக்காவை ஐக்கியப்படுத்துவது எங்கள் மக்களை ஐக்கியப்படுத்துவது தேசத்தை ஐக்கியப்படுத்துவது குறித்தே சிந்திக்கின்றது. தேசம் எதிர்கொண்டுள்ள மிகப்பெரும் சவால்களை வெற்றிகொண்பதற்கு அமெரிக்க மக்கள் ஒன்றுபட வேண்டும்.



## மகாராஷ்டிராவில் பறவைக் காய்ச்சல் எதிரொலி: 1,500 கோழிகள் பலி


இந்தியா : மகாராஷ்டிராவில் பறவைக் காய்ச்சல் எதிரொலியாக 1,500 கோழிகள் கொல்லப்பட்டன. தானே மாவட்டத்திலுள்ள ரைட்டா மற்றும் அடாலி என்ற இடங்களில் பண்ணைகளில் வளர்க்கப்பட்டு வந்த கோழிகளுக்கு பறவைக் காய்ச்சல் தொற்று இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.



இதனைத் தொடர்ந்து இரு கிராமங்களிலும் பண்ணைகளில் வளர்க்கப்பட்டு வந்த 1,500 கோழிகள் கொல்லப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. குறிப்பிட்ட இடங்களில் முகாமிட்டுள்ள சுகாதாரத்துறை அதிகாரிகள், வேறு பறவைகளுக்கு நோயின் அறிகுறிகள் உள்ளனவா என ஆய்வு நடத்தி வருகின்றனர்.

## இந்தோனேசியாவில் முகக் கவசம் அணியாதவர்களுக்கு வினோத தண்டனை..!

இந்தோனேசியாவில் முகக்கவசம் அணியாமல் இருப்பவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுவரும் நிலையில், பணம் இல்லை எனக் கூறுபவர்களுக்கு தலா 50 தண்டால் (புஷ்-அப்கள்) எடுக்க வேண்டும் என்ற வினோத தண்டனையை பொலிஸார் வழங்கி வருகின்றனர்.



இதனையடுத்து, முகக்கவசம் அணியாதவர்கள் தண்டால் எடுக்கும் வீடியோ காட்சிகள் தற்போது சமூக வலைதளங்களில் வேகமாக பகிரப்பட்டு வருகின்றன.

# விந்தை உலகம்



போர்த்துக்கலில் காணப்படும் கல் வீடு



சுவிச்சர்லாந்திலுள்ள விசித்திரமான அண்டர்கிரவுண்ட் வீடு

## நெதர்லாந்திலுள்ள Giethoorn கிராமம்







South Carolinaவில் காணப்படும் 1400 வருடங்கள் பழமை வாய்ந்த மரம்



orchid இனத்தை சேர்ந்த இப்பூ குரங்கின் முகத்தை ஒத்து காணப்படுகின்றது. இது peru மற்றும் Ecuador நாடுகளிலுள்ள காடுகளில் காணப்படுகின்றது

இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 24.01.2021 அன்று வெளியிடப்பட்டது.